
www.tamilarangam.net

# சிந்தனை

ஜுன்
1989




**SINTHANAI 3/89 MAY/June 1989**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## உங்களுடன் சில வார்த்தைகள்......

சிந்தனை 3/89 இதழைச் சற்றுத் தாமதமாகவே வெளிக்கொண்டுவரவேண்டியேற்பட்டு விட்டது.

ஸ்ருட்காட்டில் நடைபெற்ற "இலக்கியச்சந்திப்பு இல. 4" வெற்றிகரமாக நடப்பதற்கு சிந்தனை ஆசிரியர் குழுவினர் 'இலக்கியச் சந்திப்பு (4) செயற்குழுவினருக்கு தமது முழுமையான ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டியேற்பட்டதால் 'சிந்தனை' வேலைகள் சற்றுத் தாமதமாகிவிட்டது. மன்னிக்கவும்.

இலக்கியச்சந்திப்பு இல. 4. ஜூன் மாதம் 10 திகதி ஸ்ருட்காட் (மேற்கு ஜேர்மனி), லண்ட்கவுள் ஸ்ராசா 62 இல் உள்ள சர்வதேசமண்டபத்தில் நடைபெற்றது. இந்த மண்டபத்தை இலவசமாக பெறுவதற்கு 'எவாங்கலிச திருச்சபையினர்' தந்து உதவினார்கள். இலக்கியச்சந்திப்பில் கலந்து கொள்வதற்கு 98 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றன. சந்திப்பு தினத்தில் 87 பேர் வருகைதந்தனர். இதுவரை நடைபெற்ற சந்திப்புக்களில் ஆகக் கூடுதலானவர்கள் (அதிகமான வாசகர்கள்) சமூகம் கொடுத்த சந்திப்பு இதுவாகும். வெகுஜனம், தூண்டில், தேனீ, நமது குரல், யுகமை, சிந்தனை ஆகிய பத்திரிகை ஆசிரியக்குழுவினர் கலந்து கொண்டனர். கலைவிளக்கு, மக்கள் குரல், அலைகள் ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியர்கள் தவிர்க்க முடியாத காரணங்களினால் சமூகம் கொடுக்க முடியாதிருப்பதை கடிதங்கள் மூலம் அறிவித்திருந்தனர்.

வாசகர் விமர்சனம், கருத்தரங்கு, நூல் விமர்சனம், சிறந்த கவிதை, கட்டுரை, சிறுகதை ஆகியவற்றிற்கான பரிசளிப்பும் இடம்பெற்றன. அடுத்த இலக்கியச் சந்திப்பு பிராங்பார்ட் நகரில் நடைபெறும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

சகல அமைப்புக்களுடனும் இணைந்து ஜனநாயக ரீதியாக
அரசியல் நீரோட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள்
அமைப்பும் கலந்து கொள்ள வேண்டும் என்பதே எமது
கருத்தும் விருப்பமுமாகவிருந்து வந்தது. சிறிலங்கா அரசு
டன் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் பேச்சுவார்
த்தைகளில் கலந்து கொண்டுள்ளது இந்நிகழ்வுகளின் ஆரம்
பப்படிகளாகவும் அமையவேண்டும். ஆனால் தமிழீழ விடுதலைப்
புலிகளோ, சிறிலங்கா அரசோ இந்தப் பேச்சுவார்த்
தைகளைப்பற்றி பகிரங்கமாகவும் முழுமையாகவும் எந்தவித
அறிக்கைகளையும் வெளியிடாத நிலைமையில் இப்பேச்சுவார்த்
தைகளின் நோக்கம் பற்றி எந்தவிதமான கருத்தையும்
வெளியிட முடியாமலே இருக்கின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் தனித் தமிழீழம் தான் தமது
முடிவான முடிவென்றும், தமிழீழத்தைத் தவிர எந்தவித
குறைந்த பட்சத்தீர்வையோ தாம் ஏற்கத் தயாரில்லை
என்றும் இதுவரை கூறிவந்துள்ளனர். ஆனால் சிறிலங்கா அரசு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றிருக்கும் சூழ்நிலையையும் மற்றைய புறச்சூழ்நிலைமைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கையில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்குமிடையில் நடைபெறும் இப்பேச்சுக்கள் தனித் தமிழீழத்தைப் பற்றியதாகத்தான் இருக்கும் என்பது நம்பக்கூடிய விடயமாகவில்லை.

அப்படியாயின்

விடுதலைப்புலிகள் கோரும் தமிழீழத்திலும் குறைந்த வேறு எந்தத் தீர்வைப்பற்றி இப்பேச்சுக்கள் அமையும் என்பது இங்கு ஆராயப்படவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்துள்ள ஆகக்குறைந்த இடைக்காலத் தீர்வான மாகாணசபையை செயற்படுத்துவதற்கான அதிகாரங்களை வழங்கு வதிலேயே தயக்கம் காட்டிக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசிடமிருந்து அதற்கும் மேலான அதிகாரங்களைப் பேசிப்பெற முடியாது என்பதே கடந்தகாலச் சம்பவங்களிலிருந்து அறிந்து கொண்ட உண்மையாகும்..

அது மட்டுமல்ல மாகாணசபைகளுக்கான அதிகாரப்பரவலாக்கலையும், அதற்கான பொதுவான தொண்டர்படையொன்று அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கையையும் முக்கியமாக எதிர்த்தவரும் பிரேமதாஸா தான்.

சிறிலங்கா இராணுவத்தினரை வட-கிழக்குப் பகுதிகளிலிருந்து அகற்றி மாகாண சபைக்கென பொதுவான தொண்டர்படை ஒன்றை அமைக்கவேண்டுமெனவும் இலங்கை-இந்தி

www.tamilarangam.net

ய ஒப்பந்தத்தில் கூறப்பட்டிருப்பதை தமிழீழ விடுதலைப்புலி கள் உட்பட்ட சகல அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டிருந் தன. தமிழீழ விடுதலைப்புலிகள் ஒப்பந்தத்தை ஏற்று அத ன்படி இடைக்கால நிர்வாக சபையிலும் அங்கம் வகிக்கச் சம்மதித்தனர். ஆனால் மற்றைய அமைப்புகளுடன் ஜனநாய -க ரீதியான அரசியலில் கலந்து கொள்ள வேண்டுமென்ப -தில் அவர்கள் என்ன கருத்தைக் கொண்டிருந்தார்கள் என்பதை இடைக்கால நிர்வாக சபையில் தமக்கே அதிகப் படியான ஸ்தானங்கள் வேண்டுமென்று கோரிக்கை விடுத்த -தும், ஒப்பந்தத்தின் பின் தமது அரசியலை மேற்கொள் ளச் சென்ற 150 க்கு மேற்பட்ட தமிழீழ மக்கள் விடுத -லைக்கழக அங்கத்தினர்களை மட்டக்களப்பில் படுகொலை செய்ததும், ஆயுத ஒப்படைப்பு நடத்துகிறோம் என்று கூறிக் கொண்டு ஏராளமான ஆயுதங்களை இறக்குமதி செய்து அவற்றை சக இயக்கங்களுக்கெதிராகப் பாவித்தது போன்ற நடவடிக்கைகளின் மூலம் காணக்கூடியதாகவிருந்தது. இவை தவிர தமது அமைப்பின் புனரமைப்புக்கென மட்டும் சுமார் 156 கோடி ரூபாயை தருமாறு இந்திய அரசி டம் பேரம் பேசியது மற்றுமொரு பிரதிகூலமான செய லாகும்.

அல்லற்பட்ட மக்களுக்கு இடைக்கால அமைதியை ஏற்படுத் தக்கூடிய சந்தர்ப்பத்தை கொலைகளாலும், பிடிவாதங்க ளாலும் உதாசீனப்படுத்தி சுயநலப்பார்வையுடன் அணுகி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

-ய தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினரும், ஆகக் குறைந்த உரிமைகளை கொடுக்கவே மறுத்த பிரேமதாஸ -வும் பூட்டிய கதவுகளுக்குள் நடத்தும் ரகசியப் பேச்சு வார்த்தைகளிலிருந்து 'புதிதாக' எதாவது எதிர்பார்க்க லாம் என்பது கேள்விகுறிதான். மேலும் இவர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறுவது முதல் தடவையல்ல. யாழ்ப் பாணத்தில், பெங்களூரில் ஏற்கனவே இவை நடைபெற்று வந்துள்ளன.

பிரேமதாஸ ஆரம்பத்தில் மாகாணசபைகள் அமைக்கப்படு வதை எதிர்த்து வந்தார். இப்பொழுது மாகாணசபைத் தேர்தலும் நடைபெற்று அதன்பின்னர் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களும் நடைபெற்று முடிந்துவிட்டன.

தமிழீழ விடுதலைப்புலிகளும் முதலில் ஆதரித்து பின்னர் எதிர்த்து வந்தனர். மாகாணசபைகளுக்கான அதிகாரங்க -ளை வழங்குவதற்கான சட்டமூலத்தை சிங்கள இனவாதிக் களின் பலத்த எதிர்ப்புகளுக்கு மத்தியில் மிகவும் சிரமப் பட்டு நிறைவேற்றியிருக்கும் பிரேமதாஸ இந்தப் பேச்சு வார்த்தைகளுக்குப்பின் வழங்கப் போவது மாகாணசபைக ளிலும் கூடிய தீர்வையா?

அல்லது

விடுதலைப்புலிகள் பேசிப்பெறப் போவது மாகாணசபைகளி -லும் குறைந்த தீர்வையா என்பது இன்னமும் தெளிவு படுத் -தப்படாத விடயங்கள் ஆகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவை இப்படியே இருக்க

மறுபுறத்தில்

மீண்டும் தனது இராணுவத்தளங்களை தமிழ் பேசும் பகுதி

களில் அமைக்க ஆரம்பித்திருக்கின்றது சிறிலங்கா அரசு.

வட-கிழக்கில் மீண்டும் தனது புதிய இராணுவப்பிரிவுகளை

நிறுவ பெருந்தொகையான பணத்தை ஒதுக்கியிருக்கிறது.

அது மாத்திரமின்றி,

கடந்த காலங்களில் கிழக்கு பகுதிகளில் அழிவுகளை நிகழ்த்

-திய கொலைப்பட்டாளங்களான அதிரடிப்படைகளின்

முகாம்கள் மீண்டும் விஸ்தரிக்கப்பட்டும் புதிய முகாம்கள்

அமைக்கப்பட்டுக் கொண்டுமிருக்கின்றன.

காரைநகரில் கடற்படைத்தளப்பகுதி விரிவாக்கப்பட்டு

விமானத்தளம் ஒன்று அமைக்கப்படுவதற்கான ஆயத்தங்களும்

நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

சிறிலங்கா அரசின் இத்தயாரிப்புகள் தமிழ் பேசும்

மக்களுக்கு விடப்பட்டுள்ள அபாய அறிவிப்புகள் ஆகும்.

சம்மாந்துறைப்பகுதிகளில் இலங்கைப் பொலிஸாரின் உதவி,

யுடன் தமிழ்- முஸ்லிம் கலவரத்தை உருவாக்கி ஏராளமான

அப்பாவிப் பொது மக்களின் உயிரிழப்புக்களை ஏற்படுத்தி

-ய சம்பவங்கள், வடக்கு இணைப்பை முறியடிப்பதற்காக

-வும் இவற்றைக் காரணங்காட்டி மீண்டும் தனது இராணுவ

ப்படைகளை வெளியே வரச்செய்வதற்காகவும் சிறிலங்கா

அரசின் சதிமுயற்சிதான் என்பதை இன்று சகலராலும் விளங்

www.tamilarangam.net

-க்கொள்ளமுடிகிறது.

இன்று இத்தகைய சூழ்நிலையில் இருக்கும் இலங்கை அரசிடம் வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கென வெளிநாடுகளிலிருந்து கிடைத்த பணம் முழுவதும் எவ்வித தடையும், தாமதமுமின்றி வட-கிழக்கு மாகாணசபைகளுக்கு வழங்கப்படவேண்-டும்.

அங்கு மந்தமான நிலையிலுள்ள புனரமைப்புப்பணிகள் துரிதமாக்கப்பட்டு மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படவேண்-டும்.

வெலிஓயாவில் சிங்கள மக்களை அத்துமீறிக்குடியேற்றுவதை உடன் நிறுத்தி 83 ஆம் ஆண்டுக்கு முன்னிருந்த நிலை உருவாக்கப்படவேண்டும்.

வடக்கு கிழக்கு இணைப்பு நிரந்தரமானது. இதற்காக சர்வஜனவாக்கெடுப்பு ஒன்று அவசியமில்லை.

மாகாணசபைகளுக்கு முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட்டு அதிகாரப்பரவலாக்கல் நிச்சயமாக்கப்படவேண்டும்.

தமிழ்பேசும் மக்களைக்கொண்ட பொதுவான மாகாண தொண்டர்படையை உருவாக்கி விரிவாக்குவதன் மூலம் வட கிழக்குப் பகுதிகளில் இந்திய இராணுவத்தினரதும் இலங்கை இராணுவத்தினரதும் தேவை இல்லாமல் செய்யப்படவேண்-டும். இந்நிலை உறுதி செய்யப்பட்டபின்பு இந்தியப்படை-கள் வெளியேற்றப்படவேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இவற்றுடன்

அனைத்து அமைப்புக்களையும் உள்ளடக்கியதாகவும், அனைத்தப்பிரிவினரின் கருத்துக்களையும் பிரதிபலிக்கக்கூடிய தேசியக்கவுன்சில் ஒன்று உருவாக்கப்படவேண்டும்.

போன்ற கோரிக்கைகள் விடுதலைப்புலிகள் அமைப்பு தவிர்ந்த அனைத்து குழுக்களாலும் சிறிலங்கா அரசின் முன்வைக்கப்பட்ட பொதுவான கோரிக்கைகளாகும்.

இன்றைய நிலமைகளுக்குப் பொருத்தமானதாகவும், மக்களின் பிரச்சனைகளுக்கு இடைக்காலமாக குறைந்தபட்ச தீர்வுகளை கொடுக்கக்கூடிய கோரிக்கைகளாக இவை அமைகின்றன.

இவற்றையேதான் அல்லது இவற்றை அடிப்படையாகக் கொண்ட கோரிக்கைகளையேதான் தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பும் சிறிலங்கா அரசுடனான தமது பேச்சுவார்த்தைகளின் போது விடுக்கப் போவதாக இருந்தால் அவற்றை மற்றையகுழுக்களுடனும் இணைந்து பொதுவான முன்னெடுப்பாக செயற்படுத்துவது ஆரோக்கியமானதாக இருக்கும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட சிவபாலராசா போன்றவர்களைக் கடத்தியும், புனரமைப்பு வேலைகளில் மக்கள் மத்தியில் உழைத்த பஞ்சலிங்கம் போன்றவர்களை கொலை செய்து உரிமைக் கோரிக்கொண்டிருக்கும் புலி இயக்கத்தினர் எந்தவிதமான தீர்வுக்காக ஜனாதிபதியுடன்

www.tamilarangam.net

பேச்சுவார்த்தை நடத்துகின்றார்கள் என்பது புதிராகவே இருக்கின்றது.

தமிழ் பேசும் மக்களுக்கென குழப்பமற்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டு பாதுகாப்பையும் உறுதிசெய்யும் நிலைமைகளை உருவாக்கக்கூடிய செயற்பாடுகளின்மூலமே மக்களின் அன்றாடப்பிரச்சனைகளை அணுகி எதிர்கால போராட்டங்களிலும் மக்களைச் சார்ந்திருக்கமுடியும். அதுதான் மக்களைச் சார்ந்த அரசியல். எனவே இத்தகைய நோக்கத்துடன் செய்யப்படும் எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் பேச்சுவார்த்தையையும் இன்றைய நிலையில் நாம் வரவேற்கின்றோம்.

ஆனால் அப்படியான பேச்சுவார்த்தைகள் மக்களும் அறியக்கூடிய விதத்தில் பகிரங்கமாக நடத்தப்பட வேண்டும். தனி ஒரு இயக்கத்தின் பேச்சுவார்த்தைகள் மூலமாகவோ அல்லது செயற்பாடுகள் மூலமாகவோ தமிழ்மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்கமுடியாது.

மக்களின் அங்கீகாரம் பெற்ற சகல இயக்கங்களின் ஐக்கியப்பட்ட செயற்பாடுகள் மூலமாகவே தமிழ்மக்களின் இன்றைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாணமுடியும்.

**'சிந்தனை' யில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், அவற்றின் ஆக்கதாரர்களின் கருத்துக்களேயாகும். அவை 'சிந்தனை' ஆசிரிய குழுவின் கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மீன்பாடும் தேன்நாடு

வங்கக்கடலுக்கோ வெண்பட்டு மணல்விரிப்பு
மலையகத்து அருவிகட்கோ பச்சை வயல்விரிப்பு
பாடும்மீன் தாலாட்டும் பௌர்ணமி நிலாவுக்கு
ஒயிலாக முகம் பார்க்க ஒய்யாரமாய்த் தூங்க
மட்டு நகரில் வாவியிலே நீர்விரிப்பு.
எங்கிருந்தோ வந்தவர்கள் எல்லாம் அனுபவிக்க
சொந்தங்கள் இங்கே துயரம் சுமக்கிறது.

காலமெல்லாம் இங்கே
சுணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
தெம்மாங்கு பாட திசைகாணும் தாய் எருமை.
திசைதோறும் புற்கள் முலைதொட்ட பூமியிலே
கன்றை நினைந்து கழிந்தபால் கோலமிடும்.

காடெல்லாம் முல்லை கமழும் வசந்தத்தில்
வயல்புறங்கள் தோறும் வட்டக்களரி எழும்.
வட்டக்களரியிலே வடமோடிக் கூத்தாடும்
இளவட்டக் கண்கள்.

தென்றல் வந்து மச்சியின் தாவணியை இழுப்பதிலே
தடுமாறும் கால்கள் தாளம் பிசகாது.

குதிரையிலே தாவி கொதிப்போடு இளவரசன்
போருக்குப் போவான்
கொடும்பகையில் வென்றிடுவான்.

www.tamilarangam.net

எட்டாக வட்டமிட்டு இறுமாப்பாய்த் தலைநிமிர்ந்து
செட்டாகப் பாடி செழிப்பார்கள் போர்வீரர்
அண்ணாவி தட்டும் மத்தளத்தின்
தாளத்தின் சொற்படிக்கு
எல்லாமே வட்டக் களரியிலே மட்டும்தான்,
படிக்கட்டில்
பொல்லாவறுமை பசியோடு இவனுடைய
கைகோர்த்துச் செல்லக் காத்திருக்கும் வேதனைகள்;

போடியாரின் மாளிகையில் போரடித்த நெல்குவித்து
நாடோடிப்பாடல் மகிழ்ந்து பசி மறக்கும்.
ஊரின்புறத்தே ஒருநாள் நடக்கின்றேன்—

எல்லைப்புற வயலும் எழுவான் கடற்கரையும்
செல்வங்கள் எல்லாம் சொத்தாய்ப் பிறர்கொள்ள
பொட்டல்வெளியில்
கணபதியும் எங்கள் காக்கா முகம்மதுவும்
சிண்டைப்பிடித்துக் கிடக்கின்றார், என்சொல்வேன்!

□ வ. ஐ. ச. ஜெயபாலன்

சூரியனோடு பேசுதல் □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அமரர். எஸ்.ரி. என். நாகரெத்தினம்.

**— கே. சுப்பையா**

எஸ்.ரி.என். நாகரெத்தினம் காலமாகி விட்டார். அவர் மறைவு பலரை அதிர்ச்சிக் குள்ளாக்கிவிட்டது. அவர் மறைவுக்கு அஞ்சலி தெரிவித்து பல்வேறு வெகுஜன அமைப்புக்களும், தனிநபர்களும், கட்சிகளும், இயக்கங்களும் அஞ்சலிப்பிரசுரங்கள் வாயிலாகவும், அறிக்கைகள் மூலமாகவும் அஞ்சலியை தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான மக்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து அவரது ஈமக் கிரியைகளில் கலந்து தமது இறுதி அஞ்சலியை தெரிவித்துக் கொண்டுள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்கள் இன்று அனுபவிக்கும் ஜனநாயக உரிமைகளுக்காக தன்னை அர்ப்பணித்து, தனது செல்வத்தின் பெரும் பகுதியை செலவு செய்து; எவ்வித ஆடம்பரமுமின்றி, சலசலப்புமின்றி வாழ்ந்த நாகரெத்தினத்தின் மறைவு, அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு ஒரு பேரிழப்பாகும். அவர் மறைவுக்கு சற்று முன்னரும் பிரசித்திபெற்ற போராட்டங்களின்போது தன்னுடன் இணைந்து நின்ற நண்பர்களை பார்ப்பதில் அவர் காட்டிய ஆர்வமும், அதே சமயம் அவர் வழங்கிய அறிவுரைகளும் இன்னும் பசுமையாக நிழலாடுகிறது.

1927ம் ஆண்டு மாசி மாதம் 19ந் திகதி பிறந்த நாகரெத்தினம் அவர்கள், தமது கல்வியை ஆரம்பத்தில் சுன்னாகம் மயிலனி சைவப்பிரகாச வித்தியாசாலையிலும், பின்னர் யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் புகழ் மிக்க கல்லூரியாக விளங்கிய சென். பற்றிக்ஸ் கல்லூரியிலும் கல்வி கற்றார். தமது கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு, சிறிது காலம் கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்து விட்டு, அங்கிருந்து விலகி வந்து, தமது தந்தையார் மேற்கொண்ட வியாபாரத்தை பொறுப்பேற்று சிறப்புற நடாத்தி வந்தார்.

இக்காலகட்டத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காகவும், விடுதலைக்காகவும் செயலாற்றி வந்த தோழர்களோடு நெருக்கமான தொடர்பு வைத்திருந்த நாகரத்தினம் அவர்கள், தேசிய ரீதியாக கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமான உறவையும் கொண்டிருந்தார். இதன் பயனாக அக்காலகட்டத்தில் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட திரு. பொன்னம்பலம் அவர்களுக்கு பக்கபலமாக நின்று செயலாற்றினார். இவ்வுறவுகளின் அடிப்படையில் திரு. நாகரெத்தினம் அவர்கள் 1957ம் ஆண்டு சோவியத் நாட்டிற்கும் விஜயம் செய்தார்.

1960ம் ஆண்டுகளில் எமது நாடும் மக்களும் புதிய அரசியல் சிந்தனைகளால் கவர்ந்திழுக்கப்பட்ட காலம் ஆகும். இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயிகள் உணர்வு பூர்வமாக எழுச்சியுற்ற காலமாகும். ஊர்வலங்கள், கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், வேலைநிறுத்தங்கள். என்பன ஒன்றன்பின் ஒன்றாக வளர்ச்சியடைந்த காலமாகும். இக்காலகட்டத்தில்தான் சாதியின் பெயரால் அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வில் ஒரு திருப்பு முனையாகவும், முழு தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக்கு முன்னோடியாக

www.tamilarangam.net

யும் அமைந்த ஒக்டோபர் எழுச்சி உருவானது. 1966ம் ஆண்டு ஒக்டோபர் 21ந் திகதி சுன்னாகம் சந்தை மைதானத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அணிதிரண்டு " சாதியமைப்பு தகரட்டும். சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்ற கோசத்தை முன்வைத்து, ஊர்வலமாக யாழ்ப்பாண நகரை முன்னோக்கி செல்ல முயன்ற சமயம், பிற போக்குவாதிகளின் தூண்டுதல் காரணமாக பொலிசாரால் தடுத்து நிறுத்தப்பட்டது. தடையையும் மீறி ஆவேசமாக புறப்பட்ட ஊர்வலத்தை பொலிசார் குண்டாந்தடிகளால் தாக்கினர். இவ்வூர்வலத்திற்கு தலைமை தாங்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், பல முற்போக்காளர்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் காயங்களுடன் கைதானார்கள். ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்ட பதாகைகளும் சுலோக அட்டைகளும் பொலிசாரால் பறிக்கப்பட்டபோதிலும் ஊர்வலம் சகல தடைகளையும் தாண்டி ஆவேசத்துடன் ஆயிரக்கணக்கான மக்கள் பின்தொடர யாழ் நோக்கி நகர்ந்து சென்றது.

பொலிசாரின் இந்த தடியடிப்பிரயோகம் ஊர்வலத்தில் கலந்து கொண்ட மக்களை மட்டும் தாக்கவில்லை. சமூகத்தில் ஒடுக்குமுறைக்குள்ளான அனைத்து மக்களின் இயக்கங்களையும் பலமாகத் தாக்கியது. இவ்வீரம் செறிந்த ஊர்வலத்தின் முன்னணியில் அன்றைய தினம் திருவாளர்களான வி.ஏ.கந்தசாமி, கே.டானியல் கே.ஏ.சுப்பிரமணியம், டாக்டர் சு.வே.சீனிவாசகம், சுபைர் இளங்கீரன், என்.ரி.என் நாகரெத்தினம் ஆகியோர் சென்றனர். அன்றைய சம்பவம் நாகரெத்தினத்தின் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது.

இச்சம்பவம் நிகழ்ந்து இரு வாரங்களின் பின்னர் ஊர்வலத்தடையையும், பொலிஸ் தாக்குதலையும் கண்டித்து மீண்டும் அதே சுன்னாகச் சந்தை மைதானத்திலிருந்து பிரமாண்டமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்பாட்ட ஊர்வலம் ஒழுங்கு செய்யப்பட்டது. அதில் பல பகுதி பிரதேசங்களில் யாழ்ப்பாணத்தின் மூலைமுடுக்குகளிலிருந்து ஒடுக்கப்பட்டமக்கள் வந்து கலந்து கொண்டனர். அன்று மாலை உணர்ச்சிமயமான மக்கள் வெள்ளம் அலைபுரண்ட மாபெரும் பொதுக் கூட்டமொன்று கோட்டை மைதானத்திற்கே சிறப்பு சேர்த்தது. இச்சம்பவங்களால் ஆகர்சிக்கப்பட்ட ஒடுக்கப்பட்ட மக்கள் உணர்வுபூர்வமாகச் செயல்படத்தொடங்கினர். இவர்கள் மத்தியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டுதான் யாழ் மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மகாநாட்டில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதன் தலைவராக எம்.ரி.என். நாகரெத்தினம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தேனீர்க்கடை, ஆலயப் பிரவேசம், என்பவற்றிற்கு வெகுஜன இயக்கத்தின் மூலம் அறைகூவல் விடுக்கப்பட்டசமயம் அப்பெரியக்கத்தை மிகுந்த நிதானத்துடன் தலைமைதாங்கி நடத்தியவர், சங்கானை, சாவகச்சேரி, கொடிகாமம், உடுப்பிட்டி காங்கேசன்துறை, நெல்லியடி, கன்பொல்லை, அச்சுவேலி போன்ற பகுதிகளில் தேனீர்க்கடை பிரவேசம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்ட இயக்கத்தின் தோழர் மீது பல்வேறு பொய்க் குற்றச்சாட்டுக்கள் பொலிசாரால் சுமத்தப்பட்டு, சங்கானை, கொடிகாமம் போன்ற பகுதிகளில் பலர் மோசமாகத் தாக்கப்பட்டதுமல்லாமல் படுகொலைகளும் நடந்தன. இச்சமயங்களிலெல்லாம் பொலிசாரின் கெடுபிடிகள் உச்சக்கட்டத்தை அடைந்தன. இவற்றின் மத்தியிலும் அடிக்கு அடி கொடுத்து, ஒடுக்கப்பட்ட மக்களும், வெகுஜன இயக்கமும் முன்னேறிச் சென்ற வரலாறு, சாதி ஒடுக்குமுறைக்குள்ளான வரலாற்றில் புதிய அத்தியாயமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இப்போராட்டத்தின் பேரெழுச்சியைக்கண்ட பிற்போக்குவாதிகளும், அவர்களின் அருவருடிகளும் அறிப்புடைத்தனர். அச்சமயம் பாராளுமன்றத்தில் வட்டுக்கோட்டை பிரதிநிதியாக இருந்த அமிர்தலிங்கம் அவர்கள், சங்கானையில் ஒரு வியட்நாம் உருவாகி விட்டதாக குறிப்பிட்டார். ஆலயப்பிரவேசம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன்கோவில், சன்னதி முருகன் ஆலயம், வல்லிபுர ஆழ்வார் ஆலயம், மாவிட்டபுர கந்தசாமி கோவில் போன்ற ஆலயங்களில் இடம் பெற்றன. சகல பகுதிகளிலுள்ள ஒடுக்கப்பட்ட மக்களும் உயர்சாதியினர் மத்தியிலுள்ள முற்போக்காளர்களும், நல்லெண்ணம் கொண்டோரும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். இப்போராட்டங்கள் எல்லாவற்றிற்கும் நாகரத்தினம் அவர்களே தலைமை தாங்கி மக்களை வழி நடத்தினார். இச்சமயத்தில் எஸ். ரி. என். நாகரத்தினம் எம். மகேஸ்வரன் ஆகியோருக்கு எதிராக மாவிட்டபுரம் தேர் எரிப்பு வழக்கு புனையப்பட்டது. இது போன்ற எண்ணற்ற வழக்குகள் அச்சமயம் நிச்சாமம், சங்கானை, மட்டுவில் போன்ற பகுதிகளிலுள்ளோர் மீது சோடிக்கப்பட்டது. ஆனாலும் தலைவர் நாகரத்தினத்தின் மதிநுட்பத்திலும், அவரது நேர்மையான வழிகாட்டலிலும் மக்கள் வைத்த நம்பிக்கை காரணமாக, நெருக்கடிகள் தொடரத்தொடர, போராட்டம் புதிய வீச்சுடன் பல்வேறு வெற்றிகளை ஈட்டி, முன்சென்றுகொண்டேயிருந்தது. இக்காலகட்டத்தில் இவ்வழக்குகளில் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில் ஆஜராகுவதற்கு இங்குள்ள வழக்கறிஞர்கள் மறுத்து விட்டனர். அச்சமயம் புரோக்கர் அனிரஸி கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த எம். கதிரவேற்பிள்ளை ஆகியோரைத்தவிர வேறு எவரும் இம்மக்களுக்காக நீதிமன்றங்களில் வாதாடத்தயங்கினர். இச்சமயம் கொழும்பிலிருந்த திருவாளர்களான, வனம் இராசரத்தினம், கே. வைகுந்தவாசன், என். சத்தியேந்திரா போன்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சக்திகளின் உதவியை வெகுஜன இயக்கம் நாட வேண்டிய நிலை ஏற்பட்டது.

சமூக ஒடுக்குமுறைகளுக்கெதிரான விடுதலைப்போராட்டமானது பரந்தளவில் பெருத்த தாக்கத்தை உருவாக்கியது. இதனால் சாதிவெறியர்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் இருப்பிடங்களை விட்டு வெளியேற்றவும், வீடுகளை தீயிடவும் கூட எச்சமயம் தயங்கவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டத்தை நசுக்க முற்பட்டவர்கள், சண்டியர்களை உள்ளடக்கிய குண்டர் படைகளை ஆயுதம் சகிதம் உருவாக்கினார்கள். இந்நிலையில் போராடும் மக்கள் தங்களை தற்காத்துக் கொள்ளவும், எதிரிகளை முறியடிக்கவும் சில தற்பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றவும் வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

அன்று ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழும் கிராமங்களில் இளைஞர் குழுக்களை அமைத்து, ஆயுதம் தாங்கிய எதிரிகள் தங்கள் கிராமங்களில் நுழைய முடியாதவாறு தற்பாதுகாப்பு அரண்களை அமைத்து இரவுபகலாக தமது மக்களை காத்தனர். இத்தகைய நெருக்கடியான நேரத்தில் குறிப்பாக வடபகுதியை பொறுத்தவரை என்றைக்குமில்லாதவாறு ஒடுக்கப்பட்ட மக்கள் ஓரணியில் திரண்டிருந்த அன்றைய காலகட்டத்தில் தைரியமாக நின்று இம்மக்களுக்கு தலைமை தாங்கி வழி நடத்தியவர் எம்.ரி.என். நாகரத்தினம் அவர்கள். ஒடுக்கப்பட்ட மக்கள் தம்மீது திணிக்கப்பட்ட அடிமை, குடிமை முறைக்கும், சமூக ஒடுக்குமுறைக்கெதிராகவும் ஒரே சமயத்தில் பிற்போக்காளர்களையும், அவர்களுக்கு துணை நின்ற அரசயந்திரத்தையும், அதிலும் பிரதானமான பொலிஸ் படையையும் எதிர்த்து நின்று நடாத்திய வீரம் செறிந்த போராட்டம்தான் பிற்காலத்தில் இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் அமைந்தன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எம். ரி. என். நாகரத்தினம் தலைமை தாங்கிய ஒடுக்கப்பட்ட மக்களின் ஜனநாயக உரிமைகளுக்கான போராட்ட காலத்தில், அதற்காதரவாக தென்னிலங்கையிலும், பாராளுமன்றத்திலும் குரல் கொடுத்த எம் பியான எஸ். டி. பண்டாரநாயக்கா, வூடாம், அன்றைய காலகட்டத்தில் இம்மக்களின் போராட்டங்களில் நெருங்கிய ஈடுபாடு கொண்டிருந்த நா. சண்முகதாசன் அவர்களுடனும் தான் சார்ந்த மக்களின் நலன் கருதி நெருக்கமான தொடர்புகொண்டிருந்தார். மேற்குறிப்பிட்ட இருவரும் 1971ம் ஆண்டுக் கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்ட சமயம், நாகரத்தினமும் அவருடன் இணைந்து நின்ற சகாக்களில் பலரும் பொலிசாரால் தேடப்பட்டனர். இந்நேரத்தில் தலைமறைவாக வாழ்ந்து, மக்களுக்கான கடமைகளை செவ்வனே நிறைவேற்றினார். இது அவரது நெஞ்சுரத்திற்கும் போர்க்குணத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கியது.

தீண்டாமை வெகு ஜன இயக்கத்தின் தலைவராக இருந்த காலத்தில் பல தடவைகள் பொலிசாரின் குண்டாந்தடிகள் அவரை பதம் பார்த்தன. அது மட்டுமல்லாமல் பல சந்தர்ப்பங்களில் தடுப்புக்காவலிலும் இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. சமூக ஒடுக்குமுறையின் மிச்ச சொச்சங்களிலிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் முற்று முழுதாக விடுதலை பெறும் பாதையை நோக்கி, இன்று சமூக மாற்றத்திற்கான பாதையில் முன்னேறிக் கொண்டிருக்கும் நேசசக்திகளை இனங்கண்டு, அவர்களுடன் ஐக்கியப்பட்டு போராடுவதுதான் ஒடுக்கப்பட்ட மக்கள் மறைந்த "எம். ரி. என். நாகரத்தினம் அவர்களுக்கு செலுத்தும் அஞ்சலியாகும். அதுவே அவரது பெருவிருப்புமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நம் தேசம் காண்பார்.

வாழ் நிலத்தை தமிழ் வளர் நிலையை
வாழ்நாளில் நாம் இழந்தோம்
கடல் கொள்ள அதனுள் எம்
உடல் கொள்ள சிற்பங்கள்
கட்டடங்களாக சிதைந்து
அழிந்த பின்னும்
உள்ள சிறு நிலத்தை புயல்
வெள்ளம் வெறியில் என
அழிக்க
இயற்கையுடன் பொருது
எதிரியுடன் போராடி
இன்று
எங்களுக்குள் கூருகி
பகைமை கூராகி
குருதி வெள்ளத்திலே மிதந்து
குண்டின் அச்சத்தில் உலர்ந்து
மிச்சத்தில்
நீ பெரிதா ? நான் பெரிதா ?
உன் தலையா ? என் தலையா ?
மெய்தாங்க "மை" தாங்கும்
பொய் தாங்கா புவி வாழ்வு
ஐயோ! வென்று அலற!
கொய்யோ ! முறையோ ! எனக்
குறை சொல்ல உயிர்
சிறை செல்ல
நிறை செறியும் மானுடம்
பிறை போலத் தேய
திறை பெற்று கறைபடிந்த
கை யெல்லாம் உடைக்க
அடிப்பாறை அறைவார்
எவருமின்றி
காய்வார் கடிவாராய்
பேரலையில் சிக்குண்டு
நீரலையால் அள்ளுண்ட
நெடுமரம் போல
ஓய்வு ஒழிவு இன்றி
போவார் வருவாராய்
வேறில்லை மார்க்கமென
வெந்தலைந்து விறுமேத்தி பிடித்து
வீறு கொண்ட விசர்நாயாய்
வீட்டிலும் வீதியிலும் தங்களையே
கொன்று திரிபவர்
என்று திருந்தி எம்
தேசம் காண்பார்

— படை.

www.tamilarangam.net

# இலங்கைப் பாடத்திட்டம் ஜேர்மனியிலும் தேவைதானா?

ப.வி.ஸ்ரீரங்கன்.

இலங்கையிலிருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தம் வாழ்க்கை நிலையை தவறாகக் கணித்துள்ளார்கள். குறுகிய கால நலன் அடிப்படையில் வாழ்க்கைமேம்பாட்டை பற்றி சிந்திக்கிறார்களே ஒழிய நீண்டகாலநோக்கு நிலை நலனில் தெளிவின்றியிருக்கும் கட்டத்தை நெருங்கிவிட்டார்கள்.

காலாகாலமாக தமிழர்களின் மேம்பாடு அவர் தம் நோக்கு நிலையில் அணுகப்படவில்லை. மாறாக யார் யாரோ போடும் திட்டங்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் இசைபவர்களாக நாம் வளர்ந்து விட்டோம். இதனால் எமக்கு எது எது விருப்பத்தக்கது. எவை தீங்களிக்கும் என்றெல்லாம் பகுத்தாராய நாம் கால அவகாசம் எடுப்பதில்லை.

இன்றைக்கு ஜெர்மனியில் தமிழ்ச் சிறார்களுக்கு 'கல்வி' புகட்டும் வேலைத்திட்டமும், தமிழர்கள் நீண்டகால நோக்கு நிலை நலனில் தவறாக இருந்தும் அவற்றைப் பற்றி சிறிதும் சிந்திக்காது மழலைகளின் மனதில் மாற்றார் [illegible]றைகளை திணிக்கத் துணிந்து விட்டார்கள். இங்கு ஜெர்மனியில் வாழும் தமிழ் மழலைகளுக்கு கல்வி புகட்டும் திட்டத்திற்கு ஆதரவு நல்கும் அனைவரின் உன்னத [illegible]ம்பர்சிக்கும் சேவை உள்ளத்திற்கும் முதற் கண் தலை வணங்குகிறோம். இக் கல்வி அமைப்புத் திட்டம் வெற்றியளிக்க முன் வந்து உதவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெர்மன் பல்கலைக்கழக தமிழ் மாணவர் பிரிவின் ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுகிறோம்.

மேற்கூறிய யாவும் தமிழ் மக்களின் சமகால வர்த்தமானங்களை நன்கு அறிந்தும் இந்நிலையில் புதியமாற்றங்களான வேலைத்திட்டம் அமைத்து செயல்பட்டு வருபவர்கள். இந்த வகையில் எம் சமுதாயத்தில் நிலவும் சகல சீர்கேடுகளுக்கும், அடிமை மனோபாவத்திற்கும் பெருமை வஞ்சகம், சூது போன்ற கீழ்நிலைக்குணங்களுக்கும் இலங்கைப்பாடத்திட்டமே மூலகாரணம் என்பது கசப்பான உண்மை என்பதை அறிவார்கள்.

ஒரு சமுதாயத்தின் உயர்நிலைக் கொள்கைகளுக்கும் நாகரீக வளர்ச்சிக்கும் அந்த சமுதாயத்தின் இளைய தலைமுறையின் உள்ளங்களிலேயே விதை ஊன்றுவது நியதி. இதற்கு குறிப்பிட்ட சமுதாயத்தின் அறிவுஜீவிகளால் நீண்ட கால நலன் அடிப்படையில் திட்டங்கள் வகுப்பது வழக்கம். அந்த நீண்டகால நலனில் முக்கிய பங்கு வகிப்பது கல்வி அமைப்பே

மனிதனை வழி நடத்தும் "அறிவு" விசாலப்படவும், உண்மைகளை இனம் காணவும், வரலாற்று நிகழ்வுகளை அறியவும் நிகழ்கால நிகழ்வுகளை சமாளிக்கவும், வருங்கால கணிப்புகளை சரியாகத் திட்டமிடவும், கல்வியே வழிகாட்டி. இன்றைய தமிழ் மக்களின் சமகால நிகழ்வுகளை எம் மழலைகள் அறியவும், சீர்கேடுகளை களைந்தெறியவும், உண்மையான மனித நேயத்தை உருவாக்கவும் "கல்வி அமைப்பை" சீர் செய்யவும் வேண்டிய நிலையில் இருக்கிறது தமிழ்ச்சமுதாயம்.

இந்த நிலையில் நாம் செய்வதுதான் என்ன?.

www.tamilarangam.net

# அகிலம்




இதழில்

## அரசியல் புரட்சியின் ஆரம்பம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எழுச்சி நாட்கள்

ஏப்ரல் 17 - 20 : 1982 இல் இருந்து 1987 வரை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்து பதவிவிலக்கப்பட்ட ஹூயாஓபாங் கின் மரணத்துடன் மாணவர் எழுச்சிகள் ஆரம்பமாகின. மாணவர்கள் தாம் வேண்டிநிற்கும் ஜனநாயகத்திற்கும் சீனவின் "கிளாஸ்நொஸ்ட்" க்கும் அவரை ஒரு அடையாளமாகக் கொண்டிருந்தனர். ஏப்ரல் 15ம் திகதி மாரடைப்பினால் அவர் மரணமானர். ஏப்ரல் 17ம் திகதி கம்யூனிஸ்ட் கட்சியின் காரியாலயத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்த மாணவர்கள் மீது பொலிசார் கடுமையாக நடந்து கொண்டனர். இதன் விளைவாக 'தினன்மென்' சதுக்கத்தில் 100,000 மேற்பட்ட மக்கள் ஒன்று கூடினர்கள். அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இந்தச்சதுக்கத்திலிருந்துதான் மாவோசேதுங் சீனப்புரட்-சி வெற்றிபெற்றதை அறிவித்தார்.

ஏப்ரல் 22: ஹூயாஓபாங்கின் மரணச்சடங்கு. ஊர்வலங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டிருந்தும் 150,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் தினன்மென் சதுக்கத்தில் கூடினர்கள். "ஜனநாயகம் வேண்டும், ஊழல்கள் ஒழிக;" என்ற கோசங்கள் எழுந்தன. தொழிலாளவர்க்கத்தின் சர்வதேசிய கீதத்தை மக்கள் பாடினர்.

ஏப்ரல் 24: மாணவர்கள் வகுப்புகளைப் பகிஷ்கரித்தனர்.

ஏப்ரல் 27: 500,000 மக்கள் பீஜிங்கில் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். பெருந்தொகையான தொழிலாளர்களும் இவர்களுடன் கலந்து கொண்டனர்.

மே 4: முதலாவது உலகயுத்தத்திற்குப் பின்பு வேர்சயிலில் ஏற்பட்ட உடன்படிக்கையின்படி சாண்டொங் மாகாணத்தின் ஒரு பகுதியை ஜப்பானுக்கு கையளித்ததை எதிர்த்து 1919ம் ஆண்டு மே 4ம் திகதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாணவர்களின் எதிர்ப்பியக்கம் ஒன்று உருவாகியது. இவ்வகையான ஏகாதிபத்திய விரோத இயக்கங்களே சீனப்புரட்சிக்கு வழிவகுத்தன. இந்தத்தினத்தின் 70வது ஆண்டைக் கொண்டாட மாணவர்கள் ஊர்வலம் நடத்தினர். 300,000 மக்கள் அரசாங்கம் தங்களுடன் பேசவேண்டுமெனவும் பத்திரிகைச்சுதந்திரம் வேண்டுமென்றும் கோரிக்கைவிடுத்தனர். இந்த ஊர்வலத்துடன் எழுத்தாளர்களும் தம்மை இணைத்துக்கொண்டு தமது ஆதரவைத்தெரிவித்தனர். மற்றைய பெரும் நகரங்களிலும் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன.

<u>மே 5:</u> சகோசியாங் பேச்சு வார்த்தைகளுக்குச் சம்மதம் தெரிவித்தார் மாணவர்கள் வகுப்புக்களுக்குச் செல்லச் சம்மதித்தனர். ஆனால் பேச்சுவார்த்தைகள் திருப்தியளிக்கவில்லை.

<u>மே 13:</u> 1000 மாணவர்கள் தியன்மென் சதுக்கத்தில் உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர்.

<u>மே 15:</u> கொபர்ச்சோவ் பீஜிங்கு விஜயம் செய்தார். லட்சக்கணக்கான மக்கள் தியன்மென் சதுக்கத்தை விட்டகலாது இருந்தனர். கொபர்ச்சோவும் சீனக்கமியூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும் "மக்களின் பெருமண்டபத்திற்கு" பின் கதவால் செல்லவேண்டியாகியது

<u>மே 16:</u> டெங் சியோபிங் - கொபர்ச்சோவ் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பெருந்தொகையான தொழிலாளர்களும் பங்குகொண்ட ஊர்வலங்களின் விளைவாக கொபர்ச்சோ பங்குகொள்ளும் நிகழ்ச்சிகள் மாற்றப்பட்டன.

<u>மே 17:</u> பிரதமர் லீபெங் பதவி விலக வேண்டுமென்று பத்து லட்சம் மக்கள் பீஜிங்கில் ஊர்வலம் நடத்தினர். இப்படியான ஊர்வலம் அடுத்த நாளும் தொடர்ந்தது.

<u>மே 18:</u> சகோ சியாங்கும் லீபெங்கும் எதிர்ப்பியக்கத்தினரைச் சந்தித்தனர். உண்ணாவிரதம் இடைநிறுத்தப்பட்டது. லீபெங் அமைதியை"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிலைநாட்ட ராணுவத்தை அழைத்தார். அவசரகாலம் பிரகடனப் படுத்தப்பட்டது.

மே 20-21: ஆயிரக்கணக்கான பீஜிங் மக்கள் ராணுவம் நகரத்துக்குள் வருவதைத் தடுப்பதற்கு தெருக்களில் வந்தனர். மாணவர்களுக்கும் படைவீரர்களுக்குமிடையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றன. உருமிகாயு நகரில் 100,000 மக்கள் ஊர்வலம் நடத்தினர். 300,000 மக்கள் நன்கிங் நகரிலும் 200,000 மக்கள் சென்சேன் நகரிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்தினர்கள். கொங்கொங் நகரில் அநுதாப ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. பீஜிங் நகரம் ஆர்ப்பாட்டங்களின் விளைவாக செயலிழந்தது.

மே 25-26: ராணுவத்தலைவர்கள் பிரதம் லிபெங்க்கு விசுவாசம் தெரிவித்தனர். உட்கட்சிப் போராட்டத்தில் அவர் வெற்றி பெறுவது போலத் தெரிந்தது. சகோசியாங் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டதாகவும் வதந்திகள் உலாவின.

மே 28: மிரட்டல்களுக்கு எதிராக 100,000 மக்கள் பீஜிங்கில் ஊர்வலம் சென்றனர். மறுநாள் பத்து லட்சம் மக்கள் ஒன்று கூடி ஜனநாயகத்திற்கு ஒரு சிலையை உருவாக்கினர்.

மே 30: சகோசியாங் மீது டெங் 'அரசியல் குற்றங்களைச்' சுமத்தினர்: தொழிலாள மற்றும் மாணவர் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மே 31: பத்திரிகைக் கட்டுப்பாடு அமுலுக்குக் கொணடுவரப் பட்டது: 10,000 மாணவர்கள் தமது எதிர்ப்பை ஜுன் 20ம் திகதி வரை தினன்மென் சதுக்கத்தில் தொடருவதெனத் தீர்மானித்தனர்.

ஜுன் 2-3: ராணுவம் நகரத்துக்குள் வந்தது. ஆயிரக்கணக்கானோர் காயப்பட்டனர்..கொல்லப்பட்டனர்.......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நிகழ்வுகளின் பின்னணி.

முதலாளித்துவஅரசுகளைத் தூக்கியெறிந்து தொழிலாளவர்க்கஅரசுகளை ஸ்தாபித்த சோசலிச நாடுகளில் ஸ்டாலினிச கோட்பாடுகளின் அடிப்படையில் உருவாகிய தனிக்கட்சி ஆட்சி முறையும் கட்சி அதிகாரிகளின் சர்வதிகாரமும் அங்கு தொழிலாளவர்க்க ஜனநாயகத்தைச் சிதைத்ததுடன், அந்த நாட்டுப்புரட்சிகளையும் சீரழித்தன.

இந்த நாடுகளில் பூரணமான பாட்டாளிவர்க்க ஆட்சிமுறையும் சோசலிச ஜனநாயகமும் உருவாவதற்கு அந்த நாடுகளில் ஆட்சிபுரியும் 'அதிகாரிகளின் அரசாங்கங்கள்' மாற்றியமைக்கப்பட வேண்டும். இது அந்த நாடுகளிலுள்ள தொழிலாளர்கள் மக்களுடன் இணைந்து முன்னெடுக்கும் அரசியல் புரட்சியினாலேயே சாத்தியமாகும் என்பது புரட்சிகர மார்க்சிய வாதிகளின் கருத்தாகும்.

ஸ்டாலினிச ஆட்சியாளர்களுக்கு எதிராக மக்கள் எழுச்சிகள் ஏற்பட்ட பொழுதெல்லாம் அவற்றை எதிர்ப்புரட்சி என ஒடுக்க கட்சிஅதிகாரிகள் தயங்கியது கிடையாது.

1953 இல் கிழக்கு ஜேர்மனியில், 1956இல் கங்கேரியில், 1968இல் செக்கோசலோவக்கியாவில், 1980களில் போலந்தில், இன்று சீனாவில்... இந்த எழுச்சிகள் ...

ஸ்டாலினிசம் அதன் பிறப்பிடமான சோவியத்நாட்டிலேயே ஆட்டம் காணத்தொடங்கிவிட்டது. கொபச்சோவின் 'திறந்தகொள்கை'யான கிளாஸ்நொஸ்ட்டும் 'பிறஸ்ரொறிக்கா'வும் மற்றைய நாடுகளிலுள்ள அதிகாரிகளின் ஆட்சிகளில் வெடிப்புகளை ஏற்படுத்தியுள்ளன. செக்கோசலோவக்கியா, கங்கேரி, போலந்து ஆகிய நாடுகளில் பெருமளவு தாக்கங்கள் ஏற்பட்டுள்ளன. போலந்தில் உத்தியோகபூர்வமான கம்யூனிஸ்ட்கட்சி வேட்பாளர்களுக்கெதிராக 'சொலிடாறொஸ' ஈட்டியிருக்கும் வெற்றி தொழிலாளவர்க்கம் சோசலிச ஜனநாயகத்தை நிலையாக்கும் என்ற நம்பிக்கையை உறுதியாக்குகின்றது.[4]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சீனவில் இன்று நடைபெறும் ராணுவ ஒடுக்கு முறைகளினால் டெங்சியோபிங்கும், பிரதமர் லிபெங்கும் தமது ஆட்சியை நிலைநிறுத்திக் கொள்ளலாம். ஆனால் அது தற்காலிகமானது. மாணவர்களும் தொழிலாளர்களும் முன்னெடுத்த அரசியல் நடவடிக்கைகள் ஆட்சியிலிருக்கும் அதிகாரிகளை தூக்கி யெறிந்து ஒரு மாற்று அரசாங்கத்தை உருவாக்கத்தவறியதிற்குக் காரணம் அவர்களிடத்தில் ஒரு பலம்பொருந்திய தலைமையும் முழுமையான அரசியல் வேலைத்திட்டமும் இன்னமும் உருவாகாததே யாகும்.

மேற்கத்திய முதலாளித்துவவாதிகளும், கொபர்ச்சோவும் வெவ்வேறு காரணங்களுக்காக இந்த எழுச்சிகளை வரவேற்றனர். ஜோர்ஜ்புஷ்சும் அவரது சகாக்களும் இது முதலாளித்துவத்தை மீளக் கொண்டுவரும் எதிர்ப்புரட்சி என மனப்பால் குடிக்கின்றனர். ஆனால் கொபர்ச்சோவ் இது தனது 'கிளாஸ்நொஸ்ட்'டுக்கும் 'பிரஸ்ரொறிக்கா'வுக்கும் ஆதரவானது எனச் சந்தோசப்படுகின்றார்.
ஆனால் வீதியில் வந்த சீனமக்களைக் கண்டு அவர்கள் எல்லேலோரும் அஞ்சுகின்றனர். வீதிக்கு வந்த மக்கள் முன்வைத்த கோசங்கள், பாடிய சர்வதேசியகீதமெல்லாம் முதலாளித்துவவாதிகளை கலங்கவைத்து விட்டன. கொபர்ச்சோவைப் பொறுத்தவரையில் அவருடைய சீர்திருத்தங்கள் வெற்றியளிக்கத்தவறினால் மொஸ்கோவின் 'செஞ்சதுக்கம்' ஒரு 'தினன்மென்' சதுக்கமாக மாறிவிடும் என்பதில் சந்தேகமிருக்க முடியாது.

## எழுச்சிக்கான உடனடிக்காரணங்கள்

சீன மாணவர்களின் எழுச்சிக்கு மூன்று முக்கிய காரணங்களை நாம் இனங்காணக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் எந்தக் காரணமும் முதலாளித்துவத்தை மீளக்கொண்டுவருவதற்கு விரும்பும் காரணமாக அமையவில்லை.
1970 இல் பதவிக்கு வந்த டெங் சியோபிங் ஆரம்பித்த சீர்திருத்தங்களின் தோல்வியே முதலாவது காரணமாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியமுதலாளிகளுடனும் பணக்காரவிவசாயிகளுடனும் கூட்டுச்சேர்வோமென்ற மாவோவாதிகளின் அடிப்படைத்தவறே இதற்கு இட்டுச் சென்றிருக்கின்றது என்பதை நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

டெங் சுதந்திரமான வர்த்தகஸ்தாபனங்களை உருவாக்குதல் என்றதிட்டத்தின் கீழ் கட்சி உறவுகளைப் பாவித்து பணம் சேர்க்கும் தில்லுமுல்லு வியாபாரிகளை உருவாக்கினார். இவர்களுடன் மக்களைச்சுரண்டும் சமூக ஒட்டுண்ணிகளும் உருவாகினர். சீனாவில் அவர் உருவாக்கிய பொருளாதாரம் அரச கட்டுப்பாட்டிலிருக்கும் ஸ்தாபனங்களுக்கும் பொதுச்சந்தை முறைக்குமிடையில் அமைந்திருக்கின்றது. பொருட்களுக்கு இரண்டு விதமான விலைகள் நிலவுகின்றன. ஒன்று அரசாங்க ஸ்தாபனங்களின் கட்டுப்பாட்டுவிலை மற்றது பொதுச்சந்தையில் விற்கும் உயர்ந்த விலை. அரசாங்க(கட்சி) அதிகாரிகள் இந்த விலைவித்தியாசத்தைப்பாவித்து அரசகடைகளில் பொருட்களை வாங்கி பொதுச்சந்தையில் விற்றுப் பணஞ்சேர்த்துக் கொண்டனர். உயர்மட்டத்திலிருந்த கட்சிஅங்கத்தவர்களின் உறவினர்கள் மத்தியிலேயே இவ்வாறான ஊழல்கள் அதிகமாகக் காணப்பட்டன. டெங்சியோபிங், சகோசியாங் ஆகியோரின் நெருங்கிய உறவினர்கள் குறிப்பிடத்தக்கவர்கள் இதன் காரணமாக அடிமட்டத்திலுள்ள கட்சி அங்கத்தவர்கள் மக்கள் மத்தியிலிருந்து இலஞ்சத்திற்கும் மற்றும் ஊழல்களுக்குமெதிராக எழும் எதிர்ப்பியக்கங்களுக்கு ஆதரவு கொடுக்கின்றனர். சமீபத்தில் சீனாவில் செய்யப்பட்ட ஆய்வின்படி 42%மான மக்கள் நாட்டின் முக்கியமான பிரச்சனை உயர்மட்டங்களில் காணப்படும் ஊழல் என்று கருதுகின்றனர். பெரும்பான்மையான மக்களின் மனதில் ஊறியிருக்கும் எண்ணங்களைப்பாவித்து மேற்குநாடுகளிலுள்ள முதலாளித்துவ முறைகளினூடு இந்த ஊழல்களுக்கு முடிவுகட்டமுடியுமென ஒருசில புத்திஜீவிகள் கருதுகின்றனர். ஆனால் பெரும்தொகையான மக்களும் இளைஞர்களும் மேற்கத்திய நாடுகளைப்பின்பற்றுவது மேலும் ஒருசிறுதொகையினரின் இலாபங்களுக்கும் சமூகச்சீரழிவுகளுக்கும் இட்டுச்செல்லுமென எண்ணுகின்றார்கள்.

## VII

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனால் அவர்கள் சோவியத் நாட்டில் கொபர்ச்சோவ் சோசலிச அமைப்புக்குள் செய்யும் சீர்திருத்தங்களை வரவேற்கின்றனர்.

இரண்டாவது காரணம்.

தனிக்கட்சி சர்வதிகாரத்தின் கீழ் வாழ்ந்த மக்களின் ஜனநாயக வேட்கையே இரண்டாவது காரணமாகும். இது புத்திஜீவிகள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் அதிகமாகக் காணப்படுகின்றது. ஊழலுக்கும் சில தனிப்பட்ட மனிதர்களுக்குக் காட்டப்படும் சலுகைகளுக்கும் எதிரான போராட்டமானது கருத்துச்சொல்லும் சுதந்திரம், பத்திரிகைச்சுதந்திரம், கூட்டம் கூடும் சுதந்திரம் போன்றவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது.

மூன்றாவது காரணம்

இன்றைய ஆட்சியாளர்களின் கீழ் சீனா தனது இறைமையை இழந்து வருகின்றது என்ற எண்ணம் சாதாரண மக்களின் மனங்களில் ஏற்பட்டு வருகின்றது.

1919ம் ஆண்டு சான்டொங் மாகாணத்தின் ஒரு பகுதியை ஜப்பானுக்குக் கொடுத்ததற்கு எதிராகவே மாணவர்களின் 'மே4 இயக்கம்' உருவாகியது. ஆனால் இன்று டெங்கின் சீர்திருத்தங்கள் மேற்கு நாடுகளின் ஊடுருவலுக்கு வழிவகுத்துள்ளது.

தாய்வான் தீவுக்கு அருகில் உள்ள பெரிதான 'காயினன்' தீவினை ஜப்பான் அரசிற்கு, சீன அரசாங்கம் 80 வருடங்களுக்குக் குத்தகைக்கு விட்டுள்ளது. உலகத்திலேயே இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் பெயர் போன ஜப்பான் அரசாங்கம் தனது முதலாளித்துவ நலன்களுக்காகக் கட்சி அதிகாரிகளைப் பயன்படுத்துகின்றது. மறுபுறத்தில் அமெரிக்காவின் ஆயுதச்சந்தையாகவும் சீனா மாறிவிட்டது.

டெங் சியோபிங்கின் சீர்திருத்தங்கள் எல்லாம் பலனளிக்கத் தவறிவிட்டன என்பது இன்று தெளிவாகிவிட்டது. உலகத்தில் பணவீக்கம் ஏற்படாத நாடு என்று உலகவங்கியே பாராட்டிய சீன தேசத்தில் இன்று 30% பணவீக்கம் ஏற்பட்டுள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ளது. இதை அரசாங்கத்தின் எந்த நடவடிக்கைகளாலும் கட்டுப்படுத்த முடியவில்லை.

விவசாயிகள் பசளைகளையும் மிருக உணவுகளையும் அதிக விலை கொடுத்து வாங்க முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இதனால் குறைவான தானியம் உற்பத்தி செய்யப்படுவதுடன் வளர்ப்பு மிருகங்களும் உணவுக்காக அழிக்கப்படுகின்றன. 800 இலட்சம் சீன மக்கள் இன்று உணவு பற்றாக்குறையை எதிர் நோக்குகின்றார்கள். 200 இலட்சம் மக்கள் உ பட்டினி வரம்பில் வாழுகின்றார்கள். விவசாயத்திலிருந்து விடுபட்டு நகரங்களில் வேலைபார்த்த 500 இலட்சம் மக்கள் டெங்கின் பொருளாதாரக் கட்டுப்பாடுகளினால் வேலை இழந்து கிராமங்களுக்கு திரும்ப நிர்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

மாவோவின் காலத்திலும் பட்டினி இருந்ததுதான். ஆனால் சிறு தொகையான சலுகைகள் படைத்தோருக்கும் பெருந்தொகையான மக்களுக்குமிடையில் இருந்த இடைவெளி இவ்வளவு பெரிதாக இருக்கவில்லை. டெங்கின் சீர்திருத்தங்கள் ஆரம்பத்தில் வெற்றியளிப்பது போலவே தோற்றமளித்தது. சீனாவின் தேசியவருமானம் இரட்டிப்பாக அதிகரித்தது. ஆனால் டெங்கின் சீனாவுக்கும் மாவோவின் சீனாவுக்குமிடையில் வித்தியாசமிருந்தது. மவோவின் சீனாவில் வறுமையிருந்தது ஆனால் பெரும்பான்மையான மக்கள் மத்தியில் சமத்துவம் இருந்தது ஆனால் இன்று மக்கள் வறுமையிலிருந்து விடுபட்டுள்ளார்கள் ஆனால் சமூக ஏற்ற தாழ்வுகள் அதிகரித்துள்ளன. இந்த ஏற்றதாழ்வுகள் இன்று முரண்பாடுகளாக வெடிக்கின்றன.

சீனாவின் இந்த நிலைமைகளுக்கு சர்வதேசச் சூழ்நிலைகளும் ஒரு காரணமாகும். சீனப்புரட்சி வெற்றி பெற்றபொழுது சீனா தனக்கே உரித்தான முறையில் சோசலிசத்தையமைக்குமென மாவோ கூறினார். பின்பு ருசியாவிடமிருந்து பிளவு பட்ட பின்பு ஒரு தனி நாட்டில் சோசலிசத்தை உருவாக்க முடியுமென்ற ஸ்டாலினின் கோட்பாட்டை உச்சரிக்கத் தொடங்கினார்.

ஒரு தனி நாட்டில் சோசலிசத்தை உருவாக்கும் கொள்கைகளோ அல்லது மேற்கத்திய முதலாளித்துவத்திற்கு ஈடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குணை இடம் கொடுப்பதோ சீனாவின் பிரச்சனைகளுக்குத் தீர்வாக அமையாது.

சோசலிசத்திற்கும் ஜனநாயகத்திற்குமான அரசியல் புரட்சியை அந்த நாட்டு மக்கள் முன்னெடுப்பதன் மூலமே பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண முடியும். இந்தப் போராட்டம் இன்று நான்கு முனைகளில் முன்னெடுக்கப்படுகின்றது.
சீனாவில் முதலாளித்துவம் உருவாவதற்கு எதிராகப் போராடுதல், மாணவர்களும் தொழிலாளர்களும் ஊழல்களுக்கு எதிராக எடுக்கும் சகல நடவடிக்கைகளையும் ஆதரித்தல், தொழிலாளர்களின் சோசலிச ஜனநாயகத்திற்கான போராட்டத்தை முன்னெடுத்தல், தொழிலாளர்கள், மாணவர்கள், படைவீரர்களின் சுதந்திரமான அமைப்புக்களை உருவாக்குவதும் ஐக்கியப்படுத்துவதும் போராடுவதும் ஆகும்.
இந்தச் செயற்பாடுகள் வலுவடையும் பொழுது, சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் ஆதரவுடன் சீனாவின் அரசியல் புரட்சி சாத்தியமாகும் என்பதில் சந்தேகமில்லை. ■

---

கொண்டிருக்கும் தளங்கள், அவர்களுடைய மூலோபாயம், கடைப்பிடிக்கும் தந்திரோபாயம், அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான போராட்டவழி ஆகியவற்றால் வேறுபடுகின்றன. ஒரு வரலாற்று நிகழ்ச்சியை எவ்வாறு மதிப்பிடுவது, என்ன நிலைப்பாட்டை எடுப்பது, எந்த வர்க்கங்களை எதிர்ப்பது எவற்றுடன் தோழமை கொள்வது, இவற்றிற்கான சித்தாந்த அடிப்படைகள், அவற்றின் குறுகிய காலத்திட்டங்கள், நீண்டகாலத்திட்டங்கள், எந்த வகையான அமைப்பை உருவாக்க வேண்டும்.... இவையெல்லாம் நாம் காணும் வித்தியாசங்கள்.

இவற்றால் நாம் நம்மைக் குழப்பிக் கொள்ளாமல், தெளிவாக விளங்கிக் கொள்ளவும், ஆய்வு செய்யவும் வரலாற்றின் முக்கிய கட்டங்களையாவது அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. (தொடரும்...)

X

www.tamilarangam.net

# ஒரு இயக்கத்தின் வரலாற்றுக் குறிப்புகள்.

இன்றைய சமுதாய அமைப்புமுறை மாற்றப்பட வேண்டியது என நம்பும் ஒவ்வொருவரும் அந்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய தொழிலாள வர்க்க இயக்கத்தின் வரலாற்றை அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

தொழிலாளவர்க்க இயக்கங்கள் என்று குறிப்பிடும் பொழுது அவை பல்வேறு பெயர்களுடன் செயற்படுவதை நாம் காண்கின்றோம். தொழிற்சங்கவாதிகள், இடதுசாரிகள், கம்யூனிஸ்டுகள், மார்க்சியவாதிகள், சோசலிஸ்டுகள், மார்க்சிஸ்ட்-லெனினிஸ்டுகள், ஸ்டாலினிஸ்டுகள், ரொட்ஸ்கியவாதிகள், மாவோவாதிகள், புரட்சிகரமார்க்சியவாதிகள்.....இந்தப் பட்டியல் நீண்டுகொண்டு போகும்.

வரலாற்றில் இவ்வாறான வித்தியாசங்கள் தோன்றுவதற்கான காரணங்கள் பலவுண்டு.

உலக நாடுகளில் மக்கள் மத்தியில் நிலவிய வெவ்வேறான சமூக, பொருளாதார, அரசியல் நிலைமைகள், அந்த நாட்டு மக்கள் முன்னெடுத்த போராட்ட வழிமுறைகள், சோசலிசம் பற்றி அவர்கள் கொண்டிருந்த அடிப்படை சித்தாந்த வித்தியாசங்கள், அவர்களுடைய கலாச்சாரப்பின்னணிகள்...இவையெல்லாம் இந்த வேறுபாடுகள் ஏற்படுவதற்கு அடிப்படைக்காரணங்களாக அமைந்தன.

இந்த அடிப்படையில் உருவாகிய ஸ்தாபனங்கள் அவை நிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# International VIEWPOINT

FORTNIGHTLY REVIEW OF THE 4th INTERNATIONAL

***International Viewpoint*** is indispensable for understanding what's happening in the world today. Not only does it provide a record of the struggles of the working class and oppressed world-wide, it also gives a voice to all those fighting for socialism.

Recent issues have included articles on the PLO's new policy and the *intifada*; the general strike in the Spanish state; racism and anti-racist movements in Europe; women and Islam; the victory of the Workers' Party in Brazil; Poland's economic crisis; People's Fronts in the USSR.

## *Subscribe now!*

(French francs preferred; Cheques to "PEC")

**Surface Mail:** ● 1 year 200FF; £18; $34 ● 6 months 120FF; £9.50; $18

**Airmail:**

**Zone 1:** *Europe, Middle East, North Africa*

● 1 year 245FF; £21; $41 ● 6 months 135FF; £13; $22

**Zone 2:** *USA, The Americas, Africa* ● 1 year 300FF; £30; $47 ● 6 months 165FF; £16.50; $25

**Zone 3:** *Asia, Australasia* ● 1 year 340FF; £34; $50 ● 6 months 185FF; £18.50; $27

**(Dollar prices all US dollars)**

**(BLOCK LETTERS PLEASE)**

**Last name** .................................. **First name** ..................................

**Address** ..........................................................................................................

**City** ........................ **Country** ............................ **Code** ..................

Send to: *IV*, 2 rue Richard Lenoir, 93108 Montreuil, France.

# 1988 COLLECTION

**Available now: bound volumes of the 1988 collection of *IV*, complete with year index. 160FF/£15/$25 from the address above (surface mail post-free; add 20% for airmail postage).**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சமூக பொருளாதார மாற்றம் ஏற்பட்டு தமிழ் மக்களை நல் நிலைக்கு சுய கௌரவத்துடன் வாழ வழி காட்டுவதாக எல்லா முற்போக்கு சிந்தனையாளர்களும் பறைகொட்டுகிறார்கள். இன்றைய அவல நிலைக்கு சரியான வேலைத்திட்டமில்லாமல் கூறும் இவர்களின் செயல்பாடுகள் யாவும் வெறும் வெட்டிப் பேச்சாகவே போய்விட்டது. எழுத்தில் மட்டும் முற்போக்காக இருந்து எதுவித நன்மையும் கிடையாது. செயல்முறைகளை 'சுயசிந்தனையுடன்' முற்போக்கு நிலைக்கு இட்டுச் செல்லவேண்டும். இந்த வகையில் இலங்கைக் கல்வி அமைப்புமுறை தமிழ் மக்களின் எண்ணங்களைச் சிறைப்படுத்தும் அல்லது அடிமை மனோபாவ நிலைக்கு இட்டு செல்லும் அமைப்பு முறை மட்டுமல்ல, முதலாளித்துவ அடிமட்டபொருளாதார அமைப்பைக் கட்டிக் காக்கும் மேல்மட்டத்து வன்முறையற்ற 'கருத்தியல்' அமைப்பாகும்.

முதலாளித்துவ பொருளாதார அமைப்பைக் கட்டிக்காக்கும் மேல்மட்ட அமைப்பை தனியே இரு பிரிவுகளாக மார்க்சிய அறிஞர்கள் பிரிக்கிறார்கள். அடிமட்டப் பொருளாதார அமைப்பைக் காக்கும் மேல் மட்ட அமைப்பில் "வன்முறை அமைப்பும், வன்முறையற்ற அமைப்புமாக பிரித்துள்ளார்கள். வன்முறை அமைப்புகளாக பொலிஸ், இராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலை, மற்றும் கடல் ஆகாயப்படைகளும், கிராமசேவை அலுவலர்களும் வன்முறையற்ற கருத்தியல்களாகும். கருத்தியல் என்றால் வெறும் கருத்துக்களாக் ஆன பொய்க் கட்டுக்கதைகளாகும். கட்டுக்கதைகளை பரப்புவதற்கு முதலாளித்துவ அரசிற்கு இரண்டு தொழிற்சாலைகள் உண்டு". ஒன்று கல்வி அமைப்புத் கல்விக்கூடங்களும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மற்றது உண்மையான பிரபஞ்சவியலேயும், சக்தியையும் தம க்கு ஆதாரவாகக் கொண்டு மங்களை இதன் பலத்தால் தம் பொய்க்கதைகளை நம்ப வைக்கும் மதம். மதங்கள் உயிர் வாழ ஆன்ம வாதத்தை அடிப்படையாக கொண்டாலும் மத மானது வேறாகவும், ஆன்மவியல் வேறாகவும் இருப்பதை புரிந் திது கொள்ளவேண்டும். மதங்கள் கூறும் பொய்க்கருத்துக்கள் தாம் பகவத்கீதை, பைபிள், திருக்குறள் மற்றும் ஏனைய மதங்களின் வேதநூல்களும். இதை திட்டம் போட்டு மக்கள் மாற்றும் பொய்க் கருத்தியல்களாகும், என்பதை பாரதி யார் பாடலான "உண்மையின் பேர் தெய்வம் என்போம்.- அன்றி ஒன்றும் தெய்வங்கள் பொய்யெனக் காண்போம்" என்ற பாடலில் காண்க.

மேற்காட்டப்பட்ட விளக்கங்களிலிருந்து ஓரளவு கரு த்தியல்களைப் புரிந்து கொண்டோம். இனி முதலாளித்துவக் கல்வி அமைப்பு முறையைக் கீழ் நோக்குவோம்.

## முதலாளித்துவக் கல்வி அமைப்பு

இன்றைய இலங்கைப் பாடத்திட்ட கல்வி அமைப்பானது, முத லாளித்துவ அரசைக் கட்டிக்காக்கும் அமைப்பாக உள்ளது. பாடசாலைகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்வது வெறும் பாடநூல்களை கற்பதற்கு மட்டுமன்று இன்றைய சமூக விதி கள், ஒழுங்கு முறைகள், மனப்பக்குவங்கள் யாவும் அங்கு கற்பித்து விடுகிறார்கள். பின்பு உற்பத்தியில் ஈடுபாடு சட்ட திட்ட ஒழுங்குகளை கடைப்பிடித்து உழைப்பதற்கும், முதலாளி த்துவம் செழித்து வளரவும் "நியதிகளையும், கட்டுப்பாடுக ளையும் கற்பித்து விடுகிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாடசாலைகளிலே அவர்கள் வைத்துள்ள ஒழுங்கு முறைகளை மீறி நடந்தாலோ, குறும்பு செய்தாலோ, ஒழுங்கீனமாக நேரம் தவறிச் சென்றாலோ, கடும் தண்டனைகள் உண்டு. பிரம்பால் அடிப்பது, வாங்கு மேல் ஏற்றி புத்தகங்களைச் சுமந்தவண்ணம் நிற்க வைப்பது, பாடசாலை வகுப்புகள் முடிந்ததும் தங்க வைத்து வேலை செய்விப்பது போன்ற தண்டனைகளை வழங்கி சின்னஞ்சிறு உள்ளத்திலேயே அடிமை மனோபாவத்தை உருவாக்கி தொழிலாளர்களை உற்பத்திச் செய்து முதலாளிகளின் கட்டுப்பாட்டுக்கு உகந்த வகையில் மனச்சிகிச்சையளிப்பது, பின்பு கூலிகளாக மாறும் நிலைக்கு மக்கள் உருப்பெறுவார்கள்.

பாடசாலை கல்வியின் ஒழுக்கமுறைகளும், தண்டனைகளும் இன்றைய சமூகத்தோடு ஒட்டி ஒழுங்கைக் கற்பிக்கும் ஆரம்ப அறிவுறுத்தல்கள், பின்னர் உழைப்பில் ஈடுபடும்போது உழைப்பினுள் அல்லது தவறுகள் நடந்தால், கூலிக்காக நியாய ஆர்ப்பாட்டம் செய்தால் பொலிஸ், இராணுவம், சிறைச்சாலைகள், நீதிமன்றங்கள் போன்றன முதலாளித்துவ அமைப்பைக் கட்டிக்காக்கச் செயல்படும். ஆக இவை யாவும் இன்றைய உற்பத்தி சமூகமாக நடைபெற வேண்டிய விஞ்ஞான, தொழில்நுட்ப, செயலாற்றும் திறன், உடலுழைப்பு மட்டுமல்ல முதலாளிகள் எதிர்பார்க்கும் சட்ட ஒழுங்கு முறைகளுக்கும் கட்டுப்படும் மனோபாவத்தையும் பள்ளிகளில் கற்பிக்கப்படுவது என்பதை யாரும் மறக்க வேண்டாம்.

கல்வியில் போட்டி வைத்து, போட்டி மனங்களை உருவாக்கி மாணவர்களை கூறுபோட்டு உழைப்பாளிகளா

யும், முதலாளித்துவ அரச யந்திரத்தை கட்டிகாக்கும் காவலராகவும் இரு வர்க்கங்களை பாடசாலைகள் உருவாக்குகின்றன. உற்பத்திமுறை இன்று நிலவுவது போன்றே தொடர்ந்து இயங்குவதற்கேற்றவாறு மேற்படி விடயங்களை முதலாளித்துவ கல்வி அமைப்பு செயல்படுத்துகிறது. இன்றைய இக்கல்வி அமைப்பானது அடக்குபவர்களுக்கும், ஒடுக்கப்படுபவர்களுக்கும் வேண்டிய கல்வி முறைகளை பாடசாலை–கல்லூரி என்கிற இரு இடங்களில் புகட்டுகிறது. இக்கல்விமுறையை சிறந்தது என எல்லா மக்களும் ஏற்றுக் கொள்ளும்படி முதலாளித்துவம் நியமப்படுத்திவிடுகிறது. எல்லா பெற்றோரும் இதே கல்விமுறையை தம் பிள்ளைகள் கற்க அனுப்பி வைக்கிறார்கள்.

பாடசாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகம் யாவும் அரசாங்கமே நடத்துகிறது. தனியார் ஆதிக்கத்திலுள்ள கல்வி நிலையங்களை எல்லாம் அரசு கண்காணித்து வருகிறது. இங்கெல்லாம் பரீட்சைகள் அரசின் ஆணைப்படியே நடக்கின்றன. பரீட்சையில் பெறும் சான்றிதழ்களை . வைத்தே பதவிகள் முதலாளிகளாலும் அரசாலும் வழங்கப்படுகின்றன. என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்! முதலாளித்துவ யந்திரத்தை காப்பாற்றும் கல்விமுறைகளையே கற்பிக்கப்படுகிறது. மாறாக இயற்கை விஞ்ஞானத்திற்கு காட்டும் அக்கறையை சமூக விஞ்ஞானத்திற்கு காட்டுவதில்லை. உதாரணமாகக் கூறுவதாயின் சமூக விஞ்ஞானத்தில் மார்க்சிய சித்தாந்தம் புகட்டப்படுவதில்லை. பொருளாதாரத்தை அடிப்படையாக அமைத்து வரலாறு போதிக்கப்படுவதில்லை. பிரதமர்கள், ஜனாதிபதிகள், முதலமைச்சர்கள், மன்னர்கள் வரலாறே புகட்டப்படுகின்றன. இவர்களின் வரலாற்றை மனிதர்களின் வரலாறாக



www.tamilarangam.net

www.tamilarangam.net

கற்பிக்கப்படுகின்றன, ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சிப்போராட்டங்களின், அவற்றால் ஏற்பட்டு வரும் சமூக அமைப்புமாற்றங்கள் பற்றியெல்லாம் போதிக்கப்படுவதில்லை. இவையெல்லாம் போதிக்கப்படுமாயின் இன்றைய தனியுடமை பொருளாதார அடிமட்ட அமைப்பு மக்களால் சுக்குநூறாக்கப்படுத்தப்படும் என்கிற அச்சமே.

அரச யந்திரத்தை ஒட்டி இயங்கும் கருத்தியல்களையும் இதன் இயல்புகளை விரிவாக கணிப்போமானால் மேற்கூறப்பட்ட மதம் கல்வி உடன் மற்றும் குறிப்பிடத்தக்க சில. அரசு மதம் பேணுகின்ற குடும்ப அமைப்பு, முதலாளித்துவ கலை இலக்கியங்கள் (தமிழில் இராமாயணம், பாரதம், சிலம்பு போன்றவை) ரேடியோ, ட.வி, தொழிற்சங்கங்கள், சாதி-சமய அமைப்புக்கள் பிற்போக்கு முறைகளையெல்லாம் வழமையான முறையாக அனுமதிக்கும் சட்டங்கள், தேர்தல் முறை மூலம் பாராளுமன்றத்தையும், அரசியல் கட்சிகளையும் நியாயப்படுத்தும்அரசியலமைப்பு போன்றவற்றையெல்லாம் கருத்தியலோடு சேர்த்துக் கொள்ளலாம். இவை யாவினது சாரதி, அவர்களின் கல்வி அமைப்பு முறையாகும் என்பதை ஒவ்வொரு தமிழ் மக்களும் மறக்கக்கூடாது.

எனவே மேற்கூறப்பட்ட முதலாளித்துவ கல்வி அமைப்புமுறையை அவர்களின் கட்டுக்களிலிருந்து விடுபட்டு வாழு எம்மக்களின் மனங்களில் சிந்தையில் திட்டம்போட்டு திணிப்பது போல் திணிக்க முற்படுவதாவது. தமிழ் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு சமூக மாற்றத்திற்கு சம உடமை அமைப்பிற்கு எதிராக செயல்படுவதாக அமையும்'.

ஜெர்மனியில் தமிழ் மழலைகளுக்கு புகட்டும்கல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வியானது தமிழ் முற்போக்கு அறிவுஜீவிகளால் 'நீண்ட காலநலனின் நோக்கு நிலையில் 'புதிய கல்வி அமைப்பு' உருவாக்கப்படும் நிலைக்கு உருவாக்க வேண்டும்.

இவற்றை விட்டுவிட்டு குறுகிய கால நலனில் அக்கறை கொண்டு இலங்கைப் பாடத்திட்டத்தை ஜெர்மன் அரசோடு சேர்ந்து கன்கனம் கட்டி மழலைகளின் மனதில் விதைப்போமானால் சமூக பொருளாதார மாற்றம் என்பதெல்லாம் வெறும் கானல் நீராக போய்விடும்!. சம்பந்தப்பட்டவர்களுக்கு எம் அபிப்பிராயத்தை கூறியுள்ளோம். அவ்வளவுதான்.

சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி.

| | |
|---|---|
| ஆசிரியர் குழு, | Editors, |
| சிந்தனை | SINTHANAI |
| ஒல்கா ஸ்ராஸா, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் பாரதி வந்தால்....

க.ஸ்ரீதாஸ்.

பாரத தேசத்தில் ஒரு நாள்
பாரதி நீயும் மலர்ந்தாய்
உறங்கிக் கிடந்த உள்ளங்களை
உணர்ச்சி பொங்க செய்தாய்

தேசத்தின் விடுதலையின் நிலையை
தேச பக்தியுடன் உணர்வித்தாய்
அடிமை விலங்குகள் தகர்த்தெறிய
அரிய கருத்துக்களை முன் வைத்தாய்

பெண்கள் உறங்கிக் கிடந்த வேளையில்
பெண் உரிமைகளை எடுத்தியம்பினாய்
பேதமைகளை களைந்தெறிந்தாய் - அவர்களை
[illegible] வும் செய்தாய்

அரசியல் வாதிகள் பலர் வந்தனர்
அரசியல் நாற்காலிகளின் ஆசை கொண்டு
மேடையில் முழங்கினர் , உன் கருத்துக்களை
மேம்படுத்தியவர்கள் யாரும் இல்லை.

நெஞ்சு பொறுக்குது இல்லையே என்று
நெஞ்சம் நெகிழ்ந்து சொன்னாய் அன்று
நெஞ்சத்தை மறந்து பல பேர்கள்
நேர்மையின்றி நடக்கின்றார் இன்று

www.tamilarangam.net

நடக்கும் முறைகளுக்கு எதிராக
அள்ளி வீசிய உன் கவிதைகளை
அன்று நீ சொன்ன கருத்துக்களால்
[illegible]லாரி அடித்தனர் அதிகார வெறியர்கள்

இன்றும் கூட உலகம் திருந்தவில்லை
இன வடக்குமுறைகளும் ஒழியவில்லை
அகிம்சை வழியில் போனவர்களும்
அதிகாரங்களை பாவிக்கின்றனர்.

பாரதியே நீ மீண்டும் வரவேண்டும்
பாரினில் நடக்கும் முறைகளை காண
பாதை மாறி பலர் போய் விட்டார்
பார்த்த நீயும் பழகி விடாதே

சீர்குலைந்து இருக்கின்றது உலகம்
சீரமைக்க பாரதியே நீயும் வா
உள்ளக் குமுறல்களை உளறிவிட்டேன் நானும்
உருக்குலைந்தவர்களை பார்த்திட
பாரதி நீ மீண்டும் வருவாயா?


**Sinthanai**
Estd. 1985
All comunications shall be addressed to:

Editors,
SINTHANAI
Olga str. 49,
7000 Stuttgart 1
West Germany




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வாசகர் கடிதங்கள்

தோழமையுள்ள ஆசிரியர் அவர்கட்கு,

முற்போக்கு கருத்துக்களை காலத்துக்கேற்ற வகையில் நிலை தளம்பாது உறுதியுடன் அள்ளி வழங்கிக் கொண்டிருக்கும் ஒரே பத்திரிகையான சிந்தனைக்கும் ஆசிரியர் அவர்க்கும் எனது அன்பான வணக்கங்களும் வாழ்த்துக்களும்,

கடந்த 1988ம் ஆண்டிலிருந்து வரும் பத்திரிகையின் மிக மிக அரிய கருத்துக்களை மிகத் தெளிவாகவும் உறுதியாகவும் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் வெளி வந்து கொண்டிருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். இப்பத்திரிகை மேன்மேலும் வளர்ச்சியடைந்து மக்களின் அறியாமை இருளை நீக்கி அமைதி, சமாதானம், சுதந்திரம், கொண்ட சமூகத்தை அமைத்து ஒளியான வாழ்வை ஏற்படுத்த உறுதுணையாக இருக்கவேண்டும் என ஆவலுடையவனாக இருக்கிறேன்.

சிந்தனைப் பத்திரிகை சரியான நடைமுறைச் சாத்தியமான கருத்துக்களை உறுதியான நிலைப்பாட்டுடன் வெளிவருவதை நேயர் கடிதங்களுக்கு உறுதி தளம்பாது வழங்கும் சரியான பதில்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கின்றது. "காய்த்த மரம் கல்லெறி வாங்கும்" என்பது போல சிந்தனைப் புரட்சியால் ஏற்பட்ட சொல்லம்பின் தழும்புகளை தொடர்ந்து வரும் சிந்தனையில் பார்க்கக் கூடியதாக உள்ளது. அவ்வாறே நாளை விருப்புள்ள மாற்றக்கூடிய மருந்தையும் சிந்தனைக்குக் கண்டிப்பாக கிடைக்கும். ஆகையால் சிந்தனைப் புரட்சி என்றும் தொடர்ந்து செல்ல எனது வாழ்த்துக்களும் ஆதரவுகளும் என்றும் கிடைக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நான் கேட்டுக் கொண்டவாறு "கடந்த கால வரலாற்றினை எளிய தமிழில் சாதாரண மக்களும் புரிந்து கொள்ளும்படி எழுதப்பட வேண்டும்." என்ற கருத்தினை நடைமுறையில் சிந்தனை காட்டியிருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது.

எனது பக்தி நாட்டின் மேல்தானேயன்றி எந்த ஒரு தனி மனிதரையோ அமைப்பையோ சார்ந்ததல்ல. ஆனால் அந்த நாட்டின் அமைதி, சமாதானம், சுதந்திரம் ஆகியவற்றை நிலைநிறுத்த உண்மையாக உழைக்கும் பத்திரிகைகளுக்கும் அமைப்புகளுக்கும் எனது ஆதரவுகளும் நல்லபிமானமும் என்றும் உண்டு. இந்த வகையில் சிந்தனைக்கு எனது பரிபூரண ஆதரவுகள்.

நன்றி

க. கணேஸ்வரன்.

முனிசன்

சிந்தனை ஆசிரியர்களே,

..... சிந்தனை இதழ்களை வாசிக்க விரும்புகிறேன். வருங்காலங்களில் இந்தப்பகுதியில் வாழும் தொழிலாளர்களுக்கு கிடைக்க வசதி செய்யவும்....

ஸ்ரீ. திராவிடசெல்வன்

நல்லமலை
ஸ்பிறிங்வலிகுரூப்,
ஸ்பிறிங்வலி, சிறிலங்கா

ஆசிரியர் குழு,

"சிந்தனை"

அன்புடையீர்,

இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எமது ஸ்தாபனத்தின் அறிக்கையை தங்களது, முற்போக்கு அம்சங்களையும் சிந்தனை தெளிவுமிக்க கட்டுரைகளையும் தாங்கிவரும் "சிந்தனை" சஞ்சிகையில் பிரசுரிக்குமாறு தோழமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலே ஐக்கியத்துக்கான வழி!

புதிய ஜனநாயக முன்னணியின் 14.08.1988 அன்று நடைபெற்ற பேராளர் மகாநாட்டின் தீர்மானப்படி முதல் கட்ட நடவடிக்கையாக 1988.09.03ம் திகதியன்று புதிய ஜனநாயக முன்னணியினதும் அதன் தொழிற்சங்கப் பிரிவான புதிய வர்த்தக கைத்தொழில் ஊழியர் முன்னணியினதும் அங்கத்தவர்கள் அதன் தலைமைக் காரியாலயத்தில் டாக்டர் அ. சாந்தகுமார் தலைமையில் கூடிய கூட்டத்தில் அரசியல் கைதிகளின் விடுதலையும், இலங்கை — இந்திய ஒப்பந்தமும், தற்போது பூசா முகாமில் அரசியல் கைதிகள் தம்மை விடுதலை செய்யக் கோரி நடாத்தி வரும் சாகும் வரை உண்ணா விரதப் போராட்டம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு வெளியிடப்பட்ட அறிக்கை:—

---

தங்களது "சிந்தனை" இதழ்களின் ஒவ்வொரு பிரதியையும் மேற்குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

"சிந்தனை" இதழ்கள் சுதந்திரமான கருத்துப்பரிமாறல்களுடன் நல்ல சிந்தனைகளை உருவாக்கி நல்ல பல சிந்தனையாளர்களை உருவாக்க வாழ்த்துக்கள்.

புதிய ஜனநாயக முன்னணி
கொழும்பு 11,
சிறிலங்கா.

தோழமையுடன்
டாக்டர். அ. சாந்தகுமார்
இணை செயலாளர்.

www.tamilarangam.net

இலங்கை இந்திய ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகிவிட்ட போதிலும் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்த மட்டில் நிலைமைகளில் எந்த மாற்றமும் நிகழவில்லை. பழைய நிகழ்வுகள் புதிய வடிவில் தொடர்ந்த வண்ணமே உள்ளன. அமைதியான சூழ்நிலை தோன்றாமல் இருப்பதற்கு காரணம் இலங்கை இந்திய அரசுகள் இரண்டுமே தத்தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை பின்போட்டுவரும் அறிக்கைகளையும், அச்சுறுத்தல்களையும் முன் வைத்த வண்ணம் உள்ளமையே.

இந்திய அரசைப் பொறுத்தவரை தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து ஆயுதங்களைப் பறித்தெடுக்கும் ஒருதலைப்பட்ச நடவடிக்கையில் காட்டும் தீவிரம் இலங்கை அரசால் நிறைவேற்றப்பட வேண்டிய வடக்கு கிழக்கு ஒன்றிணைந்த மாகாண ஆட்சி அமைப்புக்கான பிரகடனம், மாகாண ஆட்சிக்கு தமிழ்பேசும் மக்களின் பூரண அங்கீகாரத்தைப் பெறும் வகையிலான மாகாண ஆட்சிக்கான அதிகார பிரகடனம், சட்டரீதியான ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ், ஆங்கில மொழிகளின் அமுலாக்கம் இலங்கை பல இனங்கள் வாழும் நாடு என ஒப்பந்தத்தின்படி சபையில் நிறைவேற்றப்பட்ட சட்டவாக்கத்திற்கு ஏற்ப, இன்றுள்ள பெருந்தேசிய இனவாத ஆயுதப்படை பொலிஸ் படை பிரிவுகளில் தமிழ் பேசும் மக்கள் பகுதியினருக்கு கிடைக்கவேண்டிய உரிய பங்கை இணைப்பதன் மூலம் தேசிய இராணுவப் பொலிஸ் படையாக மாற்றியமைத்தல், நாட்டை மதசார்பற்ற நாடாக அமுலாக்குதல் போன்றவற்றை செயலாக்கத்திற்கு கொண்டு வர இந்தியா தீவிரம் காட்டாததும் ஒப்பந்தத்தின் அடிப்படையிலான அரசியல் கைதிகளையும் பொது மன்னிப்பு என்ற பிரகடனத்தால் விடுதலை செய்ய இலங்கை அரசை நிர்ப்பந்திக்காததும், இந்திய

www.tamilarangam.net

அரசு இவை தொடர்பாக மௌனம் சாதிப்பதும் இந்தியாவின் ஒரு தலைப்பட்சமான போக்கை அம்பலப்படுத்துகிறது.

அதே வேளை தமிழ் போராளிக்குழுக்கள் தத்தமது கருத்து வேறுபாடுகளை முன் வைத்து தங்களுக்குள் மோதல்களையும் பெரும் அழிவுகளையும் ஏற்படுத்திக் கொண்டுள்ள படு மோசமான நிலை வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களை மக்கள் போராட்ட இயக்கத்திலிருந்து தனிமைப்படுத்தியுள்ளதோடு இலங்கை இந்திய அரசாங்கங்களின் இன்றைய போக்குகளுக்கு பலமூட்டி தமிழ் பேசும் மக்களை பேரழிவுக்கு இட்டுச் செல்ல வழி அமைக்கின்றன என்பதனையும்

இன்று வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்குள்ள ஆகப் பெரிய நெருக்கடி அரசியல் தலைமை நெருக்கடியே இந்த நெருக்கடியை தீர்க்க சகல போராளிக்குழுக்களும் தங்களின் தங்கள் குழுக்களின் தனித்துவத்தை பேணிக் கொண்டு வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையை பொதுவான கோரிக்கையாக முன் வைத்து, பழைய பகைமைகளை மறந்து, பழிவாங்கத் துடிக்கும் போக்கை தவிர்த்து ஐக்கிய முன்னணி ஒன்றை அமைத்து நாட்டின் ஏனைய சோசலிச சக்திகளோடு இணைந்து மக்கள் போராட்டத்தை நடத்த முன் வருவதே தீர்வுக்கு வழியாகும் என்பதையும் தமிழ் போராளிக் குழுக்கள் உணரா மறுப்பதும் தமிழ் பேசும் மக்களின் விடுதலையை பின் தள்ளுகிறது.

இன்றைய யூ.என்.பி. முதலாளித்துவ அரசாங்கம் பயங்கரவாத சட்டங்கள் மூலமும், ஆயுதபலத்தின் மூலமும் நாட்டின் சகல மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பறித்து ஜனநாயகத்தின் பேரால் சர்வதிகார ஆட்சி நடத்துகின்ற இவ்வரசிட

பிருந்து எவ்வித உரிமைகளையும் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல நாட்டில் எந்த மக்கள் பிரிவினரும் போராட்டமின்றி பெறமுடியாத நிலை உருவாகியுள்ளது. இன்று தமிழ் பேசும் மக்களைப் போலவே சிங்களம் பேசும் தொழிலாள விவசாய மக்கள் அரசு பயங்கரவாதத்திற்கும் அதன் ஒடுக்குமுறைக்கும், நெருக்கடிக்கும் உட்பட்டு தம்மை அரசியல் சமூக பொருளாதார நெருக்கடிகளிலிருந்து விடுவித்துக் கொள்ள போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

நேற்று வடக்கு கிழக்கில் இருந்த நிலைமை இன்று தெற்கில் தோன்றிவிட்டது. இவ்விரு பிரிவினரின் போராட்டத்தையும் ஒன்றிணைத்து பொது எதிரிக்கு எதிராக ஒருமுகப்படுத்த வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். எந்தப் போராட்டத்திலும் மக்கள் நேரடியாக பங்கு பெறாவிட்டால் அப்போராட்டம் வெற்றி பெற்ற வரலாறு இல்லை. இது வரலாறு காட்டும் உண்மை.

இன்று வடக்கு கிழக்கில் மக்கள் தமிழ்த் தேசிய போராட்டத்தில் நேரடியாகப் பங்கு பெறவில்லை. இந்த நிலையால் போராட்டம் பின்னடைவுக்கு தள்ளப்பட்டுள்ளது. தமிழ் போராளிக் குழுக்கள் தங்களுக்குள்ளே நடாத்தும் போராட்டங்கள் மூலம் மக்கள் ஈடுபாட்டை தடுத்துவைத்துள்ளதோடு மக்கள் அதிகாரத்துடன் கூடிய அரசியல் தலைமைக்கு பதிலாக ஆயுதங்களில் நம்பிக்கை வைப்பதே தலைமை என்கிற போக்கால் மக்கள் குழப்பத்தில் வைக்கப்பட்டு செய்வதறியாது மக்கள் சொந்தப் பிரதேசத்தை விட்டு தென் பிரதேசத்திற்கும் வெளிநாடுகளுக்கும் வெளியேறிய வண்ணம் உள்ளனர். இந்நிலை தொடர்ந்தால் சுதந்திரம் யாருக்கு? இந்த அரசாங்கம் எப்படி மக்களை ஆயுத பலத்தால் அச்சுறுத்தி வைத்துள்ளதோ அதே நிலை வடக்கு கிழக்கு மக்களுக்கும் நேர்ந்துள்ள நிலையில் சமாதானம் எங்கிருந்து எப்படி வரும்?

www.tamilarangam.net

இந்நிலையை முற்றிலும் மாற்றி வடக்கு கிழக்கில் சமாதானம் நிலவ வைக்க மக்கள் சக்தியால் மட்டுமே முடியும். முதலில் பூரணமான அதிகாரம் கொண்ட மாகாண ஆட்சி அமைப்பை ஏற்று வடக்கு கிழக்கில் நிலை கொண்டுள்ள இந்திய ராணுவம் வெளியேறவழி செய்ய வேண்டும். இந்திய ராணுவத்தை தமிழ் பேசும் மக்களை விட இன்றைய யூ.என்.பி அரசு தன் தேவைக்கு வைத்துக் கொள்ள விரும்புகிறது என்பதே உண்மை. அதனாலேயே ஒப்பந்த அடிப்படையில் ஏற்றுக் கொண்டவைகளை நிறைவேற்றாது பின்நிற்கிறது.

தென்பகுதியில் வெவ்வேறு சக்திகள் இந்திய ராணுவமே வெளியேறு என்ற கோரிக்கையை முன்வைத்து கிளர்ச்சியை நடத்துகின்றன. அக்கிளர்ச்சிக்கான கோரிக்கைகளில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சுயாட்சிக்கான கோரிக்கையை நிராகரிப்பதோடு வடக்கு கிழக்கு பிரதேசங்களில் இருந்து இந்திய ராணுவத்தை வெளியேற்றி அங்கு சிங்கள பெருந்தேசிய ராணுவம் நிலை கொள்ளவேண்டும் என்கின்றன. சிங்கள பெருந்தேசிய ஆளவந்த ராணுவம் பொலிஸ் பிரிவை மாற்றி தமிழ் பேசும் மக்கள் பிரிவை உரிய வகையில் இணைத்து தேசிய ரீதியிலான ராணுவப் பொலிஸ் பிரிவை அமைக்கவேண்டிய தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கையையும் நிராகரிக்கின்றன. இந்நிலையில் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்கள் இந்திய ராணுவமே வெளியேறு என்ற கோரிக்கையை முன்வைத்துள்ள தென்னிலங்கை சக்திகளோடு இணைய முடியாத நிலையை உருவாக்கியுள்ளனர்.

அந்நிய நாட்டு ராணுவமொன்று இலங்கையில் நிலை கொள்வதை இலங்கையில் எவரும் அனுமதிக்கமுடியாது. அந்நிய நாட்டு ராணுவத்தை வெளியேற்ற வேண்டிய கடமை முழு மக்களுக்குமே உரியதாகும். இந்திய ராணுவம் இலங்கை இந்திய

www.tamilarangam.net

ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தின் ஓர் அம்சம் தமிழ் பேசும் மக்களின் சுயாட்சிக்கு மாகாண சபை மூலம் தீர்வு காண்பது.

எனவே, மாகாண சபையை தமிழ் பேசும் மக்கள் அங்கீகரிக்கும் வகையில் பூரண சுயாட்சி கொண்டதாக அமைய வழிசெய்வது ஏற்படுதே இந்திய ராணுவம்வெளியேற முதல் படியாகும்.

அமுலிலுள்ள சிங்கள பெருந்தேசிய இனவாத ஆயுதப்படை, பொலிஸ் படை பிரிவுகள் மாற்றி தமிழ் பேசும் மக்கள் பிரிவை இணைப்பதன் மூலம் தேசிய ரீதியான ராணுவமாக மாற்றி அமைத்தலும் மலையக இளைஞர்கள் உட்பட அனைத்து அரசியல் கைதிகளையும் விடுதலை செய்தலும், இலங்கை மதசார்பற்ற நாடு என்பதை நிலைநாட்டலும், 1948ம் ஆண்டு இயற்றப்பட்ட இலங்கை குடியுரிமை சட்டத்தை "நீக்கி மலையகத்தில் வாழும்" இந்திய வம்சாவளி மக்களை இலங்கையராக பிரகடனப்படுத்தியமை நிலைமையை அமுக மாக்கும் இரண்டாவது படியாகும்.

எனவே இவைகளை நடைமுறைக்கு கொண்டு வர மக்களின் இயக்கத்தை முன்னெடுத்துச் செல்லபொதுவான தொழிலாளர், விவசாயிகள், மாணவர்களின் கோரிக்கையுடன் மேற்குறிப்பிட்டவையும் கோரிக்கைகளாக முன் வைத்துச் "சகல இடது சாரிக்கட்சிகளும், புரட்சிகரக் குழுக்களும் சோசலிச ஜனநாயக அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் இடது சாரி மாணவ அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும்; இல்லையேல் சோசலிச அரசு அமைப்புக்கான நிலை இன்னும் பல ஆண்டுகளுக்குப் பின் தள்ளப்படுவதோடு நாமும் மக்களும் பெரும் சீரழிவுகளுக்கு உள்ளாவதை தவிர்க்கவும், தடுக்கவும் முடியாததாகி விடுவதோடு நாட்டில் ராணுவ ஆட்சியொன்றிற்கு வழி அமைக்கும் என எச்சரிக்கிறோம்.

ஏ. இளஞ்செழியன்
பொதுச் செயலாளர்
புதிய ஜனநாயக முன்னணி

டாக்டர் அ. சாந்தகுமார்
பொதுச் செயலாளர்
புதிய வர்த்தக கைத்தொழில் ஊழியர் முன்னணி

www.tamilarangam.net

# தொழிலாளர் சக்தி

## சுயாதீன தொழிலாளர் வர்க்க இயக்கத்தை கட்டியெழுப்புவோமாக

மேதினம் இன்று தொழிலாளர் தினமாகும். தொழிலாளர் தினமாகிய இன்று இத்தினத்தை பலர் பல நோக்கங்களுக்காக கொண்டாடுகின்றார்கள். ஆளும் கட்சியிலிருந்து பல்வேறு அமைப்புக்கள் இத்தினத்தை கொண்டாடுவதால் இத்தினத்துக்குரிய வரலாற்று முக்கியத்துவம் குறைந்து காணப்படுகிறது. ஆளும் கட்சியினர் தமது பலத்தை நிரூபிப்பதற்காகவும் இடதுசாரி கட்சிகள் தமது இருப்பை நியாயப்படுத்துவதற்காகவும் வேறு சில அமைப்புகள் இத்தினத்தை வருடாந்த நிகழ்வாகவும் கொண்டாடுகின்றனர். ஆனால் இத்தினத்தின் வரலாற்று முக்கியத்துவத்தை நாம் முதலில் விளங்கிக் கொள்ளவேண்டும். 8—மணி நேர வேலை கோரிக்கையை முன்வைத்து அமெரிக்க தொழிலாளர் போராடி வெற்றி பெற்ற தினமாகும். இந்த கோரிக்கைக்காக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் ஸ்தாபனமயப்பட்டு ஐக்கியத்துடன் வேலை நிறுத்த போராட்டத்தில் குதித்து தமது கோரிக்கையை வென்றெடுத்தார்கள். அன்றிலிருந்து இத்தினம் தொழிலாளர் தினமாக கொண்டாடப்படுகிறது. குறிப்பாகத் தொழிலாளர்கள் தமது அமைப்பின் பலம் பலவீனம் பற்றி மதிப்பீடு செய்தலும் மற்றும் தொழிற் சங்க, கட்சிகளோடு தோழமையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்கு இத்தினத்தை பயன்படுத்துகின்றார்கள்.

ஆனால் எமது நிலை என்ன? 1948 இல் சுதந்திரம் அடைந்த பின்னர் முதலாளித்துவ கட்சிகள் மாறி மாறி பதவிக்கு வந்ததே தவிர தொழிலாளர்கள் வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும் இல்லை. 1947 இல் பொது வேலைநிறுத்தம் 1953 ஆகஸ்ட் கர்த்தால் போன்ற தொழிலாளர் வர்க்க வெகுஜன எழுச்சிகளை முன்னின்று நடத்திய இடதுசாரி கட்சிகள் பின்னர் காலப் போக்கில் தமது கொள்கைகளை கைவிட்டு ஆளும் வர்க்க கட்சிகளுடன் கூட்டு சேர்ந்தனர். இத்தகைய துரோகமிழைப்புடன் படிப்படியாக பேரினவாதத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திற்கு சரணாகதி அடைந்தார்கள். இதன் மூலம் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக கோரிக்கையான சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டது. இதன் மூலம் தொழிலாளர் வர்க்கம் இன ரீதியாகவும் பிளவுபட்டது.

தொழிலாளர் வர்க்கம் மிகவும் பலவீனம் அடைந்து சின்னாபின்னமான நிலையில் உள்ளது என்ற உண்மையை உணர்த்தலே முதலாவது பணியாகும். மேலும் தொழிலாளர்களை ஸ்தாபனமயப்படுத்தல் அவசியமாகும். அமைப்பு ரீதிக்கு உட்பட்ட தொழிலாளர்களை ஸ்தாபன ரீதியில் இயங்க வைக்கவேண்டும். தொழிற்சங்க அமைப்புக்கள் ஜனநாயகத்தை பேணி தலைமைத்துவத்தைக் கட்டியெழுப்ப வேண்டும்.

இத்தகைய பணிகளை தொழிலாள வர்க்க இயக்கத்தினுள் நின்று மேற்கொள்ள வேண்டும். மேலும் சில தொழிற்சங்க தலைவர்கள் தாம்கற்ற சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்துவதற்காக தொழிலாளவர்க்க அமைப்புக்களை தன்னிச்சையாக போராட்டத்திற்குள் இறக்கி பின்னர் இத்தொழிலாளர்களை மிகவும் பாதிப்புக்குள்ளாக்குகின்றார்கள். மற்றும் தொழிலாள வர்க்கத்திற்காக பலர் வாய்ப்பேச்சு மூலம் சேவை செய்கின்றார்கள். இத்தகையோரை இனம் கண்டு தொழிலாளர்கள் தமக்கென ஒரு சுயாதீன அமைப்பை உருவாக்க வேண்டும். இத்தகையதோர் அமைப்பே ஆளும் வர்க்கத்தின் சகல விதமான தாக்குதல்களுக்கும் முகம் கொடுக்கும்.

தமிழ் மக்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தின் பொழுது பல இளைஞர்கள் தம் உயிரை தியாகம் செய்து போராடினார்கள் என்பது வரலாறு கண்ட உண்மையாகும். ஆனால் எமது தொழிலாள வர்க்க இயக்கத்தைப் பொறுத்த வரையில் எமது இயக்கத்திற்காக தம்மை அர்ப்பணித்து போராட முன் வருபவர்கள் ஒரு சிலரே இந்நிலையில் எமது இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு உள்ள ஒரே மார்க்கம் இந்நாட்டில் ஒரு தொழிலாள வர்க்கக் கட்சியைக் கட்டி எழுப்புவதேயாகும். அவ்விலட்சியத்தை முன்னெடுப்பதற்காகத் தான் நாம் தொழிலாளர் சக்தி என்னும் இப்பத்திரிகையை ஆரம்பித்துள்ளோம்.

www.tamilarangam.net

உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என்ற கோசத்தை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ள ஒரே மார்க்கம் தொழிலாள வர்க்க கட்சியை கட்டியெழுப்புவதேயாகும்.

அனுப்பியவர் சொ. சிவபாலன் – யாழ்ப்பாணம்.

# பிரேமதாஸ, ஜேவிபியினரின் வெங்காய நடவடிக்கைகள்.

..மற்றைய விடயங்களில் ஜே.வி.பி யினரின் " புரட்சிகர " நடவடிக்கைகள் எந்தளவிற்கு முற்போக்கான விடயங்களோ இல்லையோ தூஷிப்புக்களையும் கோசங்களால் "ஸ்டண்ட்" அடிப்பதிலும் இப்பொழுது இவர்கள் யு.என்.பி மற்றும் எஸ்.எல்.எப்.பி யினரையும் மிஞ்சி விடுவார்கள் போல் இருக்கின்றது. இவர்களுடைய இந்த "ஸ்டண்ட்" அடிக்கும் திறமையால் சாதாரணமக்களை கவர்ந்தார்களோ இல்லையோ, பிரேமதாஸவை தம்முடன் ஒத்துழைக்க வைத்தன் மூலம் தமது நட்புறவுகளைப்பலப்படுத்திக்கொண்டுள்ளனர். தங்களைப்பாதிக்காத வரையில் தீவிர கோசங்கள் இடுவதும் வீர முழக்கமிடுவதும் எந்த நேரம் உயர்த்தி வாசிப்பது எந்தநேரம் அடக்கி வாசிப்பது என்பதெல்லாம் பிரேமதாஸாவிற்கு தெரியாத கலைகள் அல்ல. கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னும் பின்னும் அவரது ராகங்கள் எப்படியெல்லாம் மாறிப் போகின்றன என்பனவெல்லாம் சொல்லித் தெரிய வேண்டிய விடயங்களல்ல.

"இலங்கையில் இந்தியப் பொருட்களுக்குத் தடை விதிக்கப்பட வேண்டும் " என்று கொழும்பு நகரம் முழுவதும் இனவாதம் கலந்த சுவரொட்டிகளை ஜே.வி.பி யினர் ஒட்டியுள்ளனர். முன்னர் மலையகத் தொழிலாளர்களை 'இந்திய விஸ்தரிப்புவாதிகள்' என வர்ணித்தது போல இப்பொழுது இவர்களால் புதிதாக வெளியிடப்பட்டுள்ள புரட்சிகர அறிவிப்பு இது. ஜே வி.பி யினரின் மற்றைய கோரிக்கைகளைக் கண்டு அவஸ்தைப்பட்டுக்கொண்டிருந்த பிரேமதாஸா இவர்களின் இந்தக் கோரிக்கையைக் கேள்விப்பட்டவுடன் எல்லாவற்றையும் விட இது கொஞ்சம் பரவாயில்லை, ஏதோ எங்க

www.tamilarangam.net

களைப் பாதிக்காத வரையில் ஜேவிபியையும் சமாளித்தமாதிரி இருக்கும்' என்ற விதமான சில நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளாராம். இதன்படி பம்பாய் வெங்காயம் 'வெளிநாட்டுவெங்காய'மென்றும் மைசூர் பருப்பு செம்பருப்பு என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதாம். இந்தியத் தமிழ்த்திரைப்படங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு இலங்கையின் 'தேசியத்தை' நிலைநிறுத்துவதற்காகவும் மக்களுக்கு விழிப்புணர்வையூட்டவும் 'இன்ப' காட்சிகளைக் கொண்ட 'ஜோன் போர லன், பிக் றபிள் இன் லிட்டில் சைனா, சொலொயின் பிளட் ' போன்றஅமெரிக்கப்படங்கள் காட்டப்படுகின்றன.

பிரேமதாஸா ஒத்துழைத்தாரே என்பதில் ஜேவிபியினருக்குத் திருப்தி, ஜேவிபியினரைச் சமாளித்து விட்டோமே என்று பிரேமதாஸாவுக்குத் திருப்தி.

பிரேமதாஸாவின் அனுசரணையுடன் இவ்வண்ணு தீவிரச் செயல்களைச் செய்துள்ள ஜேவிபியினரின் அதிதீவிரத்தனம் போகப்போக இன்னும் தீவிரமடைந்தால் எப்படியிருக்கும்.....?

போகிறபோக்கில் இப்படியான அறிவிப்புக்களும் விடப்படலாம்.

சிங்கள மக்களின் பாரம்பரிய நடனமான கண்டிய நடனம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டதால் அதுவும் தடைசெய்யப்படலாம்... பௌத்தசமயம் கூட 'இந்தியவிஸ்தரிப்புவாதியான' அசோகனின் மகிந்தன் மூலமாக இலங்கையில் பரப்பப்பட்டது. அதுவும் தடைசெய்யப்படலாம்.....இந்திய மொழியான பாளிமொழியிலிருந்துதான் சிங்களமொழி உருவானதாம். எனவே சிங்கள மொழி பேசப்படுவதும் தடைசெய்யப்படலாம்.....அது மட்டுமல்ல

இந்திய....குடியேற்றக்காரனான விஜயனின் வழித் தோன்றல்களான சிங்கள மக்கள் யாவரும் இலங்கையிலிருந்து வெளியேற்றப்படலாம்!

இதன் பின்பு இந்திய வாடை அடிக்காத சிறிலங்காவில் ஜேவிபியினரும் பிரேமதாஸாவும்.........

-பௌர்ணமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெகுஜனம்

ஒரு முற்போக்கு எழுத்தாளனுடைய கடமை எழுதுவதுடன் முடிந்து விடுவதில்லை. அவன் எழுதுவதை அச்சேற்றுவது, பிரசுரிப்பது, பின் வாசகர்களிடம் சேர்ப்பது.....இவை எல்லாம் அவன் சந்திக்கும் போராட்டங்கள் என்பதைப் பலர் அநுபவத்தில் அறிவார்கள்

தமது சுதந்திரமான கருத்துக்களை சொந்த முயற்சியுடன் வெளிக் கொண்டுவரும் பத்திரிகையாளர் வரிசையில் " வெகுஜனம் " ஆசிரியர் குழுவினரும் அடங்குவார்கள்.

போர்காலத்தில் கூடிய கும்பலில் 'முரச'றைந்த பலர் மிக இக்கட்டான காலங்களில் கடைகளைப்பூட்டி அஞ்ஞாதவாசம் சென்ற வேளைகளில் அந்த இடைவெளிகளை நிரப்ப நிதானத்துடன் முன்வந்தவர்கள் "வெகுஜனம்" ஆசிரியர் குழுவினர்கள்.
ஒரு வருடத்தைப்பூர்த்தி செய்துள்ள 'வெகுஜனத்'திற்கு எமது பாராட்டுக்களைத் தோழமையுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

சிந்தனை ஆசிரியர் குழு.




வெகுஜனம் கிடைக்குமிடம்.

VEKUJANAM
A.ALEX
Zi: OG3
KIRCHWEG.111
NIEDER BERGHEIM
4788 WARSTEIN.2
WEST GERMANY.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




மொழிபெயர்ப்பாளருக்கு விடை கொடுங்கள். ஜேர்மன் மொழியில் உங்கள் வேலைகளைச் செய்வதற்கு உதவுகின்றது இந்தச் சொல் அகராதி. இதன் மூலம் உங்கள் ஜேர்மன் நண்பர்கள் தமிழ் பேசவும் முடியும். விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

TAMIL REFUGEES HUMAN RIGHTS &
WELFARE COMMITTEE (WEST-GERMANY)
bei Somasundaram
Siemensstr. 225
5300 Bonn 1 (Dransdorf)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்